Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

SATURDAY, NOVEMBER 27, 2021


சனிக்கிழமை நவம்பர் 27, 2021 | ஒளி: 07 கதிர்: 164 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

# புதிய பிறழ்வு பேரழிவு தரும்

டெல்டா பிறழ்வை விட பத்து மடங்கு சக்தி வாய்ந்த புதிய வைரஸ் கண்டுப்பிடிக்கப்பட்டள்ளது.

இது, 'கொவிட் 19' மாறுபாடாகுமெனத் தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு (WHO) பேரழிவு தருமென எச்சரித்துள்ளது. புதிய பிறழ்வு தென் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கொவிட் தொற்றாளர்கள் திடீரென அதிகரித்துள்ளதை அடுத்தே, இந்தப் புதிய வைரஸ் பிறழ்வு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# பிரபாகரனுக்கு கேக் வெட்டினர்

எம்.றொசாந்த்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 67ஆவது பிறந்தநாளான நேற்று (26) யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினர்.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள், பிரபாகரனின் உருவ படத்துக்கு முன்பாக கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடியுள்ளனர்.

அதேவேளை, மாவீரர் வாரம் அனுஸ்டிக்கப்பட்டு- வரும் நிலையில், யாழ். பல்கலைகழகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் ஆயுதங்களுடன் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### காஸ் சிலிண்டர் வெடிப்பு தொடர்கின்றன

# இளம் குடும்பத் தலைவி மரணம்

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், இன்றைக்கு 12 நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட காஸ் சிலிண்டர் வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த இளம் குடும்பப் பெண் மரணமடைந்துள்ளார்.

கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தொடர்ந்து 12 நாள்களாக சிகிச்சை பெற்றுவந்த பொலன்னறுவை வெலிகந்த, சுதுன் பிட்டிய கிராமத்தைச் சேர்ந்த 19 வயதான பெண்ணே, நேற்றுமுன்தினம் (25) மரணமடைந்தார்.

பீ.ஜி.அயோஷா குமுதுனி என்ற பெண்ணே, இவ்வாறு மரணமடைந்துள்ளார் என வெலிகந்த பொலிஸார் தெரிவித்தார்.





வீட்டு சமையலறையில் வைக்கப்பட்டிருந்த சமையல் காஸ் சிலிண்டரின் ஊடாக காஸ் அடுப்பை கடந்த 13ஆம் திகதியன்று பற்றவைப்பதற்கு முயன்றுள்ளார். அந்த முயற்சி தோல்வியடைந்தமையால், நெருப்பு குச்சியை பற்றவைத்து காஸ் அடுப்பை பற்றவைப்பதற்கு முயன்றுள்ளார்.

இதன்போதே, இவ்வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்றவேளையில் வீட்டில் யாருமே இருக்கவில்லை. அபாயக்குரல் கேட்டு, ஓடோடிவந்தவர்கள் பெண்ணைக் காப்பாற்றி, வெலிகந்த பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்தனர். அதன்பின்னரே மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, கடந்த 12 நாள்களாக மேலதிக சிகிச்சைப் பெற்றுவந்தார்.

### சட்டமா அதிபராக தமிழர் இருந்தும்

# கைதுகள் குறையவில்லை

பா.நிரோஸ்



சட்டமா அதிபராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் கைது செய்யப்படுவது குறைந்தபாடில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வரவு -செலவு திட்டத்தின் நேற்றைய (26) குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு

தொடர்ச்சி P2

# டி.ஐ.ஜிக்கு அழைப்பாணை



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வழக்கில் சாட்சியமளிப்பதற்கு பொலிஸ் மா அதிபர் சி.டீ. விக்ரமரத்ன (டி.ஐ.ஜி) அழைக்கப்பட்டுள்ளார். அவருக்கான அழைப்பாணை நேற்று (26) பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### காஸ் சிலிண்டர் வெடிப்பு தொடர்கிறது

# நிக்கரவெட்டியவில் சம்பவம்



சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துச் சிதறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நவம்பர் மாதத்திற்குள் மாத்திரம் ஆறு காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறியுள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நிக்கவரெட்டிய கந்தேகெதர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில், நேற்றுக்காலை (26) காஸ் சிலிண்டர் வெடித்துச் சிதறியது.

தொடர்ச்சி P2

# சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்காத நாடுகளே இல்லை



லிட்ரோ எரிவாயு நிறுவனம் வருடமொன்றுக்கு 350 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை தயாரித்து, சந்தைக்கு அனுப்புகின்றது. அதில், ஐந்து அல்லது ஆறு விபத்துகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்த நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண,

தொடர்ச்சி P2

# கடை சவாரிகளை விரைந்து முடியுங்கள்

## ஹேமந்த ஆலோசனை: சொல்ல முடியாது என்கிறார்



நோயை பரப்பும் நபர்கள் சமூகத்தில் அனைத்து இடங்களிலும் உள்ளனர் என தெரிவித்த பிரதி சுகாதார சேவை பணிப்பாளரும் விசேட வைத்தியருமான ஹேமந்த ஹேரத், எனவே எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை உரியமுறையில் பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### கொவிட் நோயாளிகளுக்கு

# மோல்னுபிரவீர் குளிசை

## நடமாடும் சேவை மூலம் பூஸ்டர்:

## 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது டோஸ்

## கிராமிய கொரோனா கட்டுப்பாட்டுக்கு அதிக அவதானம்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியை ஏற்றி மூன்று மாதங்கள் கடந்த 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், நடமாடும் சேவையின் ஊடாக, மூன்றாவது டோஸாக பூஸ்டர் (Booster) தடுப்பூசியை ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரத்துறை



அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

வைத்தியசாலைகளுக்கு க்ளினிக் செல்லும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், அந்த சிகிச்சையகத்தில் வைத்தே இந்த பூஸ்டர் தடுப்பூசியை வழங்க நேற்று (26) நடைபெற்ற, கொவிட் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# டயர் கொளுத்திய இருவர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியிலுள்ள வீதியில், நேற்று (26) வெள்ளிக்கிழமை டயர் கொளுத்திய குற்றச்சாட்டின் கீழ், யாழ்ப்பாண பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை அறிந்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், எரிந்துகொண்டிருந்த டயரை அப்புறப்படுத்தியதுடன், அந்த டயரை கொளுத்திய இருவரையும் சந்தேகத்தின் பேரில்கைது செய்து, தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

மாவீரர் வாரம் அனுஷ்ட்டிக்கப்பட்டுவரும் நிலையிலும் , தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் (நவம்பர்-26) என்பதனாலும்,

தொடர்ச்சி P2



# நினைவேந்தலைத் தடுக்கும் கோரிக்கையை நிராகரித்தது முல்லைத்தீவு நீதிமன்றம்

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட 72 பேருக்குத் தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

### ஸ்டாலின், கோபால் பாக்லே சந்திப்பில்

# தமிழர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்

## நம்புகின்றார் இராதா எம்.பி



பா.நிரோஸ்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை கோபால் பாக்லே சந்திருப்பது தமிழர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# பாடசாலைகளுக்கு கிறிஸ்மஸ் விடுமுறை

நத்தார் பண்டிகையையொட்டி அரசாங்க பாடசாலைகளுக்கு மேலதிகமாக இரண்டு நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.



டிசெம்பர் மாதம் 23,24 ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா, டிசெம்பர் 27ஆம் திகதியன்று மீண்டும் வழமைபோல ஆரம்பமாகும் என்றார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# புதிய பிறழ்வு பேரழிவு தரும்

B.1.1.529 என பெயரிடப்பட்டுள்ள இந்த வைரஸ், ஹொங்கொங் உள்ளிட்ட சில நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பூசியின் ஊடாக கிடைக்கும் நோயெதிர்ப்பு சக்திக்கும் மீறிய வலுவை புதிய பிறழ்வு கொண்டுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிப்பட்டுள்ளது.

# கைதுகள் குறையவில்லை

தொடர்ந்து உரையாற்றிய அவர், அரிசி, உரம் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அதில், அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. தமிழர்களும், முஸ்லிம்களும் இந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தாலும், தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான அநீதிகளை தடுக்க அவர்களால் முடியவில்லை என்றார். தமிழர்கள் ஒருபோதும் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்லர் எனத் தெரிவித்த அவர், “ஒரே நாடு, ஒரே சட்டம்” எனும் ஜனாதிபதி செயலணியின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் பெரும் பிரச்சினைகளை உருவாக்குமென எச்சரித்தார்.

# நிக்கரவெட்டியவில்

இதனால், அவ்வீட்டுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

கொட்டாவ - பன்னிப்பிட்டிய கல்லூரி சந்தி அருகிலுள்ள வீடோன்றில் நேற்று முன்தினம் (25) சமையல் எரிவாயு வெடித்தது. இதனால், வீட்டுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன், எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதற்கு முன்னதாக, 2021 மார்ச் 03 ஆம் திகதி மருதானை, சங்கராஜ மாவத்தையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் எரிவாயு கசிவினால் வெடிப்பு சம்பவம் ஏற்பட்டது.

வெலிகம கப்பரதொட்ட சுற்றுலா விடுதியில் நவம்பர் 04 ஆம் திகதி வெடிப்புச் சம்பவம் பதிவானது. அதன் பின்னர், நவம்பர் 16 ஆம் திகதி இரத்தினபுரி பஸ் தரிப்பிடத்திற்கு அருகே தனியார் உணவு விற்பனை நிலையத்தில் வெடிப்புச் சம்பவம் பதிவானது. காஸ் சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் வெடிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு ரீட் மாவத்தையிலுள்ள சர்வதேச உணவு தயாரிப்பு நிறுவனமொன்றுக்கு சொந்தமான உணவக வளாகத்தில் கடந்த 20ஆம் திகதியன்று எரிவாயு சிலிண்டர் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோல்னுபிரவீர் குளிசை

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தி ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், தொற்றா நோய்களுக்கு இலக்காகியிருக்கும் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், மூன்றாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், புற்று நோயாளிகள், புற்று நோய்க்கு சிகிச்சை பெறுவோர், உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டோர், இரத்தமாற்று செய்யப்பட்ட நோயாளிகள், தொற்றா நோய் காரணமாக நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த அனைவருக்கும், விசேட வைத்திய பரிந்துரைக்கமைய மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

உரிய சிகிச்சையகங்கள் (க்ளினிக்) அல்லது சனிக்கிழமை நாட்களிலும், இத்தரப்பினருக்கான மூன்றாவது தடுப்பூசி ஏற்றல் பணிகள் முன்னெடுக்கப்படுமென சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொவிட் நோயாளிகளுக்காக, பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மோல்னுபிரவீர் குளிசை (Molnupiravir Capsule) பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், கொவிட் வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை நாட்டுக்குக் கொண்டுவந்தது போன்றே, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த குளிசைகளையும் நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

கொவிட் தொற்றுப் பரவல் தொடர்பில் கிராமிய மக்கள் கொண்டுள்ள கவனக் குறைவு தொடர்பிலும் இதன்போது எடுத்துக்கூறப்பட்டதுடன், கிராமிய ரீதியில் பரவும் கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் அவர்களுக்குத் தெளிவுபடுத்தல்களை முன்னெடுப்பது தொடர்பிலான வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்காத நாடுகளே இல்லை

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்காத நாடுகளே இல்லை என்றார்.

லாப் நிறுவனத்தின் எரிவாயு சிலிண்டர்களின் ஊடாக, 2015ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும், வீடுகளில்- 12, வியாபார நிலையங்களில்- 9, எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையங்களில்- 2 என விபத்துகள் பதிவாகியுள்ளன.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர், சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு காரணமாக விபத்து சம்பவிக்காத நாடுகள் ஏதும் கிடையாது என்றார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் பாவனையில் இருந்து நுகர்வோரை பாதுகாப்பதற்காக நுகர்வோர் அதிகார சபை எரிவாயு சிலிண்டர், எரிவாயு குழாய், சிலிண்டரில் பொருத்தப்பட்டுள்ள இணைப்பு ஆகியவற்றின் தரங்கள் தொடர்பில், 2012ஆம் ஆண்டு 5 வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

எரிவாயு சிலிண்டரின் கலவை மற்றும் தரம் தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும், தனியார் நிறுவனமும் ஒன்றினைந்து பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன எனத் தெரிவித்த அவர், எரிவாயு சிலிண்டர் தொடர்பில் காணப்படும் சர்ச்சைக்கு இன்னும் இரண்டு வார காலத்திற்குள் தீர்வு முன்வைக்கப்படும் என்றார்.

எரிவாயு சிலிண்டரின் தரத்தை அதிகரிப்பதற்கான வர்த்தமானி வெளியிடல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பிலான சட்டத்தை அமுல்படுத்தல் தொடர்பில் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், எரிவாயு சிலிண்டர் வெடிப்பு மற்றும் அதனால் ஏற்படும் விபத்துக்களை முழுமையாக இல்லாதொழிப்பது அரசாங்கத்தின் பிரதான இலக்காகும் என்றார்.

# டி.ஐ.ஜிக்கு அழைப்பாணை

தாக்குதல் தொடர்பில் சரியான தகவல்கள் கிடைத்தும், முறையான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல், சட்டவிரோதமான முறையில் கவனத்தில் எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த வழக்கு, மூன்று நீதிபதிகள் கொண்ட விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறது. சாட்சியமளிப்பதற்காக பொலிஸ் மா அதிபர், எதிர்வரும் 29ஆம் திகதியன்று அழைக்கப்பட்டுள்ளார்.

அரச புலனாய்வுத் துறையின் பிரதானி நிலந்த ஜயவர்தன சாட்சியமளித்ததன் பின்னர், பொலிஸ் மா அதிபரை சாட்சியமளிக்க எதிர்பார்த்துள்ளதாக, முறைப்பாட்டை நெறிப்படுத்தும் சிரேஷ்ட பிரதி சொலிஸிட்டர் ஜெரல் திலீப பீரிஸ், விடுத்த கோரிக்கைக்கு அமையவே அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நீதிபதிகளான நாமல் பலல்லே, ஆதித்ய பிட்டபெத மற்றும் மொஹமட் இஷர்டீன் ஆகியோர் முன்னிலையிலேயே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

# கடை சவாரிகளை விரைந்து முடியுங்கள்

சுகாதாரப் பிரிவினரால் தினமும் 5,000 இற்கு மேற்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டாலும் ஒருவருக்கு தொற்று ஏற்பட்ட பின்னரே எம்மால் அவர் அடையாளம் காணப்படுகிறார். ஆனால், நாம் எதிர்பார்ப்பது இதனையல்ல எனத் தெரிவித்த அவர், தொற்று ஏற்படாமல் இருப்பதையே எதிர்பார்க்கின்றோம் என்றார்.

கொழும்பில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த சந்தர்ப்பத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு நோய் அறிகுறிகளுடன் நோயைப் பரப்பும் ஒருவர் எம்மத்தியில் இருக்கலாம். எனவே, அதற்காக நாம் ஆகக்கூடுதலான முறைமையில், பாதுகாப்பை கடைபிடிப்பது அவசியம் என்றார்.

கொரேடானா மரணத்தில் அதிகரிப்பு காணப்பட்டாலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதென தெரிவித்த அவர், பரிசோதனை செய்து தொற்றாளர்களை கண்டுபிடிப்பதற்கு தாமதமாகிறது என்றார்.

‘கடை சவாரி’ தினமாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது இலங்கையின் சம்பிரதாயம் அல்ல. புதிதாக எமது கலாசாரத்துடன் இணைந்து விட்டது. கடை சவாரிகளை ஆரம்பித்தால் பரவாயில்லை. ஆனால் அதற்கு செல்பவர்களும் இதனை நிர்வாகம் செய்பவர்களும் அதிகபட்சமாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது அவசியம் என்றார்.

கொள்வனவை முடித்துக்கொண்டு குறுகிய நேரத்திற்குள் அந்த இடத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென கேட்டுக்கொண்ட அவர், வருட இறுதியின் போது, பொருள்கள் கொள்வனவு, பண்டிகை நடவடிக்கைகள் என பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுக்க இடமுள்ளது என்றார்.

அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமாயின், சிலவேளையில் பயணக்கட்டுபாடு அல்லது ஏனைய கட்டுப்பாடுகளை கடுமையாக்க நேராதென கூறமுடியாது. ஆகையால், கடை சவாரிகளை சுகாதார பாதுகாப்புடன் நிறைவு செய்யுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

# தமிழர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் நேற்றைய (26) குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இவ்விருவரின் சந்திப்பு முக்கியமானது என்றார்.

இலங்கை மீனவர்கள் பிரச்சினை, இலங்கை, வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கும் எனவும் கூறியதோடு, மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, உருளைக்கிழங்கின் விதைகள் இறக்குமதி செய்யப்படுவதற்குப் பதிலாக அதனை உள்நாட்டில் உற்பத்தில் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது 50 கிலோகிராம் உருளைக்கிழங்கு விதை, 23 ஆயிரம் ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்கிணங்க உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராமை உற்பத்தி செய்வதற்கு நூறு ரூபாய் விவசாயிகளுக்கு செலவாகிறது. அவர்கள் அதனை 150 ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# நினைவேந்தலைத் தடுக்கும் கோரிக்கையை நிராகரித்தது முல்லைத்தீவு நீதிமன்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு,முள்ளியவளை ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி ஐயன்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய ஏழு போலிஸ் நிலையங்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததற்கு அமைவாக குறித்த 72 பேருக்கு தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில, தடைக்கட்டளைகளில் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தவர்களில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பாராளுமன்றம் உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன், சமூகசெயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் ஆகியோர், மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கான தடை உத்தரவை நீக்குமாறு நேற்று முன்தினம் (25) நகர்த்தல்பத்திரம் ஊடாக நீதிமன்றினைக் கோரியிருந்தனர்.

இந்நிலையில் பிரதிவாதிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை ஆராய்ந்த நீதிபதி ரி.சரவணராஜா, தடை செய்யப்பட்ட இயக்கமொன்றின் நிகழ்வினை நினைவுபடுத்தக்கூடியதாக நினைவுகூரல்களை மேற்கொள்ளமுடியாது. ஆனால், இறந்தவர்களுக்கு பொதுவான நினைவுகூரல்களை மேற்கொள்ளமுடியும் எனவும் மாவீரர் நாள் தடைக்கட்டளையைத் திருத்தியமைத்துக் கட்டளை பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து 26.11.2021இன்று, நினைவேந்தல் செயற்பாடுகளைத் தடைசெய்யுமாறு பொலிஸார் நகர்த்தல்பத்திரம் ஊடாக நீதிமன்றினைக் கோரியிருந்தனர். பொலிஸாரின் கோரிக்கையினை மறுத்த நீதிமன்றம் 25.11.2021அன்று வழங்கிய திருத்திய கட்டளையை தொடர்ந்தும் நீடித்து உத்தரவு பிறப்பித்தது.

# டயர் கொளுத்திய இருவர் கைது

வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்புகள், கண்காணிப்புகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்,குருநகரில் வீதியில் டயர் கொளுத்தப்பட்டுள்ளது. அவர்களின் நோக்கம் என்ன? என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மாவீரர்நாள் நினைவேந்தலுக்கு தீருவில் திடலில் அனுமதி

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை தீருவில் திடலில் மாவீரர்நாள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அதற்கான அனுமதியை எழுத்து மூலம் கோரி இருந்தார்.

அதற்கு , நகரசபை தலைவர் என். செல்வேந்திரா , “ பொலிஸார் தீருவில் திடலை இந்த நிகழ்வுகளுக்கு வழங்க வேண்டாமென அறிவுறுத்தியிருந்தனர். ஆகையால் , அத்திடலில் நிகழ்வுகளை நடத்த அனுமதிக்க முடியாது" என எழுத்து மூலம் பதிலளித்து இருந்தார்.

இந்நிலையில், சபை உறுப்பினர்கள் சபையை கூட்டி அது தொடர்பில் முடிவெடுக்கப்பட வேண்டுமென நகர சபைத் தலைவரிடம் கோரியதை அடுத்து சபைக்கூட்டம் கூட்டப்பட்ட போது, கொரோனா விதிமுறைகளை கடைப்பிடித்து, சுகாதார நடைமுறைகளுடன் நிகழ்வினை நடத்துவதற்கு அனுமதிப்பதென கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒலிபெருக்கி சாதனங்கள் பயன்படுத்துவதாயின் அதற்காக மாத்திரமே பொலிஸாரிடம் அனுமதி கோருவதென முடிவெடுக்கப்பட்டது.


எப்.முபாரக்
ஹஸ்பர் ஏ ஹலீம்





# கிண்ணியா அவலம்: கண்ணீரை யார் துடைப்பார்?

"இந்த படகு விபத்துக்கு காரணம், வேகமான ஓட்டமே ஆகும். வெட்டும் போதும் வேகமாக வெட்டியதால் இந்த அனர்த்தம் இடம் பெற்றது. நான் சுழியோடியே வெளியே வந்தேன். அத்துடன் ஐந்து பிள்ளைகளையும் காப்பாற்றினேன் " என படகு பயணத்தில் உயிர் தப்பி, கிண்ணியா தளவைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பிய ஆசிரியரான எம். சாமித் ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்தார்.

இவ் விபத்தில் தெய்வாதீனமாக உயிர் தப்பிய இன்னொரு தாய் கண்ணீர் வடிய இவ்வாறு விவரித்தார். "நீரில் மூழ்கும் போது, பிள்ளைகளை கூட கையால் பிடிக்க முடியவில்லை, எப்படி பிடிப்பது? ஏதோ உயிர் தப்பி பிள்ளையுடன் கரை சேர்ந்தேன்" என்றார்.

மற்றுமொரு தாய், இவ்வாறு அந்த அனர்த்தத்தை இவ்வாறு விவரித்தார். "காலை 7.10 மணியளவில் படகில் ஏறி, நடுவுக்கு வந்தோம். நிறைய பயணிகளை ஏற்றியிருந்தனர். இதன் போது ஒரு பகுதி குடை சாய்ந்து, நீரில் மூழ்கியது. எனக்கு நீந்தத் தெரிந்ததால், ஒரு கையால் பிள்ளையை இறுகப் பிடித்து, காலால் நீந்தி கரை சேர்ந்தேன். ஆழமான பகுதியில் இருந்தே நீந்தி வந்தேன். அதன் பின்னர், ஓட்டோவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டேன்" என்றார்.

உலகத்தையே சோகமயமான அதிர்வலைகளை ஏற்படுத்திய படகுப் பாதை விபத்து நாளான 23.11.2021 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையை எவராலும் மறக்க முடியாது. திருகோணமலை, கிண்ணியா, குறிஞ்சாக்கேணி களப்பு ஆற்றில் படகுப்பாதை உடைந்து கவிழ்ந்ததில், சகுசஹி (வயது-03), சஹிலா (வயது-06), பரீஸ் பகி (வயது-6), சப்ரியா (வயது-30), சேஹப்துல் சாஹிர் (வயது-68), எப். சரீன் (வயது-8) ஆகியோரின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் இவர்களில், ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு சகோதரங்கள், மற்றுமொரு குடும்பத்தில் இருந்து தாயும் மகளும் அடங்குவர். ஆற்றில் மூழ்கியவர்களில் 27 க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

> **காலை 7.10 மணியளவில் படகில் ஏறி, நடுவுக்கு வந்தோம். நிறைய பயணிகளை ஏற்றியிருந்தனர். இதன் போது ஒரு பகுதி குடை சாய்ந்து, நீரில் மூழ்கியது. எனக்கு நீந்தத் தெரிந்ததால், ஒரு கையால் பிள்ளையை இறுகப் பிடித்து, காலால் நீந்தி கரை சேர்ந்தேன். ஆழமான பகுதியில் இருந்தே நீந்தி வந்தேன், அதன் பின்னர், ஓட்டோவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டேன்**

கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் உள்ள கிண்ணியா நகர சபையையும் கிண்ணியா பிரதேச சபையையும் இணைக்கும் பாலமே குறிஞ்சாக்கேணி பாலம் ஆகும். பெரியாற்று முனையையும் குறிஞ்சாக்கேணியையும் பிரிக்கும் இப்பாலம் சுமார் 130 மீற்றர் தூரம் கொண்டதாகும். 1977 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தப்பாலம், 40 வருடங்களுக்கு மேலாகியும் புனரமைக்கப்படவில்லை. உடைந்த நிலையில் போக்குவரத்துக்குத் தகுதியற்ற நிலையில் காணப்பட்ட குறித்த பாலம் புனரமைப்புக்காக மூடப்பட்டிருந்தது. இதன்காரணமாக, இயந்திரப் படகு பாதை மூலமான போக்குவரத்து ஆற்றைக் கடப்பதற்காக இடம்பெற்று வந்தது. இந்தப் படகுப் பாதை மூலமாக நாளாந்தம் 1,000 க்கும் மேற்பட்டோர்கள் போக்குவரத்து செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது .

சம்பவ நாளன்று காலை வேளையில், பிரதேச சபை பகுதியில் இருந்து நகர சபை பகுதியை நோக்கி, 17 மாணவர்கள் உட்பட 30 பேரை ஏற்றிக்கொண்டு பயணித்த வேளையில், கரையை அடைய சுமார் 50 மீற்றர் தூரத்தில், படகு தடுமாற தொடங்கியது. படகின் ஒரு பக்கமாக மெதுமெதுவாக நீருக்குள் மூழ்கத் தொடங்கியுள்ளது. அப்போது அதில் பயணித்த சிறுவர்கள், பயணிகள் அச்சமடைந்து செய்வதறியாது கதறி அழுத் தொடங்கிய நிலையில், கண் சிமிட்டும் நேரத்துக்குள் படகின் ஒரு பகுதி சரிந்து நீருக்குள் முழுமையாக மூழ்கியது. அதில் பயணித்த சிறுவர்கள் மற்றும் பயணிகள் அனைவரும் கதறியபடியே நொடிப்பொழுதில் நீருக்குள் மூழ்கத் தொடங்கினார்கள்.

இந்த நிலையில், மீட்புப் பணிகள் மும்முரமாக இடம்பெற்றன. கடற்படையினர், கிராம இளைஞர்கள், முப்படையினர், சுழியோடிகளும் ஆகியோரின் உதவியுடன் இந்ந நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மூழ்கியவர்கள் மீட்கப் பட்டதையடுத்து அவர்களது பொருட்களும் மீட்கப்பட்டன. பலியான பாடசாலை மாணவர்களது புத்தகப் பைகள், உபகரணங்களும் மீட்கப்பட்டன.

இந்த இயந்திர படகானது சுமார் மூன்று வளளங்களை கொண்டு பலகையுடன் இணைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும்.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இந்தப் படகுப் பாதை குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் அங்கு நிலவிய குறைபாடு என்னவென்பதை கவனித்திருக்கவில்லை என்பது, மக்களுடைய பொதுவான குற்றச்சாட்டாகக் காணப்படுகின்றது. மற்றும், படகுப்பாதைக்கான அனுமதியானது உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே வழங்கப்பட்டதாக அப்பகுதியில் உள்ள மக்கள் குறை கூறுகின்றனர்.

கிண்ணியா, பெரியாற்றுமுனை பகுதியை சேர்ந்த தனியார் ஒருவருக்கு இப் படகு செலுத்துவதற்கான அனுமதிக் கடிதம் கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச். எம்.நளீமால் கையொப்பமிட்டு, 2021.10.28 வழங்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'மேற்படி விடயம் சம்மந்தமாக குறிஞ்சாக்கேணி இறங்கு துறை பகுதியில் பால நிர்மாண காலப் பகுதியில் பொது மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில், மோட்டார் படகு சேவையை நடத்துவதற்கு தங்களுக்கு பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அனுமதி வழங்கப்படுகிறது.

குறித்த சேவையின் போது, பாதுகாப்பு நியமங்கள் கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும். குழந்தைகள், பாடசாலை சிறார்களுக்கு மேற்படி சேவையானது இலவசமாக வழங்கப்பட வேண்டும். படகினது உறுதிப்பாடு குறித்து அவ்வப்போது சோதிப்பது அவசியமானது. மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் தங்களுக்கு வழங்கப்படும் அனுமதி இரத்துச் செய்யப்படும்'.

இது தொடர்பில், கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தியிடம் வினவிய போது, "தவிசாளரால் வழங்கப்பட்ட இந்த அனுமதி கடிதம் சபைக்கோ உறுப்பினர்களுக்கோ தெரியாமல் வழங்கப்பட்டுள்ளது. இது பல வாதப் பிரதிவாதங்களை உண்டாக்கியிருக்கிறது. நகரசபைக்கு முறையாக அனுமதி வழங்கப்பட முடியுமாயிருந்தால், அதன் தரம் உறுதிச்சான்று, தொழில்நுட்பம் சம்பந்தமான சான்றிதழ், Marine, Nara சான்றிதழ், பயணிகளின் உச்ச எண்ணிக்கை, ஓட்டுநர் அனுமதிப்பத்திரம், பாதுகாப்பு அங்கிகள் ஏற்பாடு, உதவி ஆட்கள் நியமனம், பயணிகள் காப்புறுதி ஏற்பாடு எனப் பல்வேறு விடயங்கள் பரீட்சிக்கப்பட்டு இருக்கும். முறைகேடாக தவிசாளரால் வழங்கப்பட்ட சான்றிதழுக்கு தவிசாளரே வகை கூற வேண்டும். இதற்கு முன்னரும் இவ்வாறு பல முறைகேடுகள் நடந்து, அதற்கு சட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன்" என்றார்.

> **கிண்ணியா வைத்தியசாலையில் ஒரே வரிசையில் ஆறு பேரினதும் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. சடலகள் அனைத்தும் வெள்ளைத் துணியினால் மூடப்பட்டிருந்தன. ஒரு பக்கத்தில் சிலர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதையும் வைத்தியசாலையின் வைத்தியர்கள், ஊழியர்கள் அவசர சிகிச்சை வழங்குவதில் அக்கறை காட்டினார்கள். அவர்களது பணிகளை என்றுமே மறக்க முடியாது**

இந்த பாலம், 2015இல் வெள்ள அனர்த்தம் காரணமாக, இரண்டாக பிளந்து சேதமாகியது. இதனால், தற்காலிக இரும்பு பாலம் உடைந்த பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக போடப்பட்டது. ஜனாதிபதி தேர்தலின் போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கிண்ணியா நகர சபை மைதானத்தில் 2014 டிசெம்பரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது, இப் பாலத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்து தருவதாக வாக்குறுதியளித்தார். ஆனால் அது நிறைவேறவில்லை.

2019 இல் நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராகப் பதவிவகித்த ரணில் விக்கிரமசிங்கவால் பாலத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. அதுவும் தோல்வி கண்டது. பின்னர், தற்போதைய அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சாவால் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் வேண்டுகோளுக்கு இணங்க 2021.04.10ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது. வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, இடை நடுவில் கைவிடப்பட்டு மீண்டும் ஆரம்பமானது .

பாலத்தின் புனர்நிர்மாணம் காரணமாக, படகுப்பாதை சில மாதங்கள் இயங்கி, மூன்று வாரங்கள் கடந்த நிலையில் இக்கோர சம்பவம் நிகழ்ந்து, உயிர்களைக் காவு கொண்டுள்ளது. இந்தப் படகுப்பாதை விபத்து தொடர்பில் கிண்ணியா நகர சபை தவிசாளர், படகு உரிமையாளர், படகு ஓட்டுநர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அனர்த்தம் இடம்பெற்றவுடனே கிண்ணியா பாலத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். அசம்பாவிதங்கள் எதுவும் நடந்து விடக் கூடாதென்பதில் பொலிஸார் அக்கறையாக இருந்தனர். அதேவேளை நீரில் மூழ்கியவர்களை காப்பாற்றும் முயற்சிக்கு எவராலும் இடையூறு ஏற்படக் கூடாதென்பதிலும் பொலிஸார் அக்கறையாக இருந்தனர்.

அதேவேளை திருகோணமலை_ மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள கிண்ணியா பகுதியில் முப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். அப்பிரதேசமெங்கும் ஒருவிதமான அதிர்ச்சியும் பரபரப்பும் சோகமும் நிலவியது.

கிண்ணியா வைத்தியசாலையில் ஒரே வரிசையில் ஆறு பேரினதும் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. சடலகள் அனைத்தும் வெள்ளைத் துணியினால் மூடப்பட்டிருந்தன. ஒரு பக்கத்தில் சிலர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதையும் வைத்தியசாலையின் வைத்தியர்கள், ஊழியர்கள் அவசர சிகிச்சை வழங்குவதில் அக்கறை காட்டினார்கள். அவர்களது பணிகளை என்றுமே மறக்க முடியாது. அனைத்து வைத்தியசாலை ஊழியர்களும் தமது கடமையை பொறுப்பாக செய்ததை அங்கே பார்க்க முடிந்தது. உயிரிழந்தவர்களின் உறவினர்களும் பிரதேச மக்களும் அழுது கண்ணீர் வடித்த வண்ணம் காணப்பட்டனர். எங்கும் அழுகைச் சத்தங்களே கேட்டன.

இங்கு முக்கியம், உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனை செய்யப்படாமல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதனையே அனைவரும் எதிர்பார்த்தனர். அது நிறைவேறியது.

கிண்ணியாவில் மிக முக்கியமான இடங்களை மறித்து ஆத்திரம் கொண்ட இளைஞர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு டயர்களை எரித்து தமக்கு நியாயத்தை பெற்றுத் தருமாறு கோரினர். கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான செய்திகளை திரட்டச் சென்ற ஊடகவியலாளர்களின் அலைபேசிகளைப் பறித்து, அதில் பதிவு செய்யப்பட்ட படங்கள், வீடியோக்களை அழித்த விரும்பத்தகாத சம்பவங்களும் அங்கு இடம்பெற்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவமும் நடந்தது.

> **கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான செய்திகளை திரட்டச் சென்ற ஊடகவியலாளர்களின் அலைபேசிகளைப் பறித்து, அதில் பதிவு செய்யப்பட்ட படங்கள், விடியோக்களை அழித்த விரும்பத்தகாத சம்பவங்களும் அங்கு இடம்பெற்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவமும் நடந்தது**

கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தினால் அரச சொத்துகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டதாக தெரியவருகின்றது. இவ்வாறான செயல்களால் அரச அதிகாரிகள் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டாமலிருக்க முடியாது. இந்த ஆர்ப்பாட்ட செயற்பாடுகாளின் பின்னால் ஓர் அரசியல் சக்தி இயங்கியதாகவும் மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது.

கல்விக்காய் காத்திருந்த பச்சிளம் சிறார்களின் எதிர்காலத்தை நினைத்து பார்க்கையில் மனம் கனக்கிறது. ஆறாத் துயரால் பெற்றோர்கள் ஆழ்ந்த மனவேதனையுடன் இருக்கிறார்கள். இந்தப் பாலம் இருந்திருந்தால் இவ்வாறான படகு விபத்து இடம் பெற்றிருக்காது. இப்போது, இலங்கை கடற்படை மூலமாக சுமார் 25 நபர்கள் பாதுகாப்பு அங்கியுடன் பயணிக்க கூடிய இயந்திர படகு சேவை வெள்ளிக்கிழமை (26) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தமாக, இந்த விடயம் தொடர்பில், பால அபிவிருத்தி தொடர்பில் ஆரம்பத்தில் கரிசனை காட்டாது மக்களின் கருத்துகளைச் செவிசாய்க்காது அசட்டுத்தனமாக இருந்தமை பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவங்கள் இனியும் நடக்கக் கூடாது.

இன்னும் ஆறாத வடுக்களாக தங்களுக்கான நியாயமானதும் விரைவாகவும் பால அபிவிருத்தியை உரிய காலத்தில் செய்திருந்தால் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்காது என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.























## மீயுயர் சபையில் வரம்பு மீறும்

# வாய்மொழி துஷ்பிரயோகம்



மகேஸ்வரி
விஜயனந்தன்

வீடுகள், தொழில் நிலையங்கள், போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் அது பாலியல் ரீதியாகவோ, உடல், உள ரீதியாகவோ, வாய்மொழியாகவோ இடம்பெறுவது சாதாரணமாகிவிட்டது என்பதை விட அனைவருக்கும் பழகிய ஒன்றாகவும் போய்விட்டது.

ஆனால் ஒரு நாட்டின் மீயுயர் சபை அதிலும் பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை இயற்றும் இடத்தில், ஒரு பெண் உறுப்பினர்கள் வாய்மொழி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமைமைய எவ்வகையிலும் எவரும் அனுமதிக்க முடியாது. பெண்களைப் பாதுகாக்க பல்வேறு சட்டதிட்டங்களை இயற்றும் மீயுயர் சபையிலேயே இந்த நிலை என்றால், ஏனைய இடங்களில் பெண்கள் எவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பதை புரிந்துக்கொள்ளலாம். துஷ்பிரயோகம் என்பது உடல் உள ரீதியானது மாத்திரமல்ல. வாய்மொழி ரீதியான துஷ்பிரயோகமும் இதில் பிரதானமான உள்ளடங்குகின்றது.

அதாவது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தொடர்பாக நடைபெற்று வரும் வாத விவாதங்களில் கலந்துகொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்து வரும் நிலையிலேயே, எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் மனைவி தொடர்பில், பட்டும் படாமலும் புரிந்தும் புரியாமலும் சில இரட்டை அர்த்தம் கொண்ட கருத்துக்களை ஆளுங்கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி சபையில் முன்வைத்தார்.

இவரது உரையின் போது, இவர் உரையாற்றிய தொனி, கூறிய கதை, சுட்டிக்காட்டிய உதாரணங்கள் என்பவற்றுக்கு மெய்மறந்து ஆளும்கட்சியினர் மேஜை மீது தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதால் வந்த ஆர்வக்கோளாறே இவரை அன்றைய தினம் அதிகம் அதிகம் பேசத் தூண்டியது. இதனால் தான் தமது வாயிலிருந்து எவ்வாறான வார்த்தைகள் வெளிவர வேண்டும் என்பதை இவர் மறந்து விட்டார்.

எனினும் இவரது உரை பெண்களை அவமதிக்கும் வகையில் உள்ளதாகத் தெரிவித்து, திஸ்ஸ குட்டியாராச்சி உரையாற்றி முடித்ததுமே, எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தமது எதிர்ப்பை முன்வைத்தார்.

ஆனால், அப்போது சபைக்கு தலைமைத் தாங்கிய ஆளுங்கட்சியின் உறுப்பினரான அஜித் ராஜபக்ஷ, "திஸ்ஸ குட்டியாராச்சியின் உரையில் தவறு இருப்பது போன்று தனக்கு தெரியவில்லை. இருந்தால் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டுச் செல்லுங்கள்" என்றார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தின் பெண் உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவர், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளேயிடம் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன முறைப்பாடு ஒன்றை செய்தார்.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே சபாநாயகரின் கவனத்துக்கு கடிதம் மூலம் கொண்டு வந்தார்.

சட்டத்தை உருவாக்கும் இடமொன்றில் அதற்கு பங்களிக்கும் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் பெண்கள், அந்த இடத்திலேயே வாய்மொழி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிறார் எனின், இதன்மூலம் ஒட்டுமொத்த சமூகத்தின் சீரழிவும் புலப்படும்.

அதேவேளை, பொது இடங்களில் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி, அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் உயரிய நிறுவனம் ஒன்றில் பெண் உறுப்பினர் ஒருவருக்கு எதிரான, வாய்மொழி துஸ்பிரயோகம் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே சபாநாயகரிடம் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது.

அத்துடன், அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவான மட்டத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 12 பெண் உறுப்பினர்களின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் பாராளுமன்றத்தில் கருத்தாடல்கள் இடம்பெறுவதற்கான சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அக்கடிதத்ததில் தெரிவிக்கப்பட்டிருந்தது.


இதனையடுத்து திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பியின் உரை தொடர்பில் தான் கவலையடைவதாகவும் அதியுயர் சபையில் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என சபாநாயகர் கடுமையாக எச்சரித்தார்.

"இதுபோன்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதை உறுதி செய்ய ஆளும், எதிர்க்கட்சி பிரதமக் கொறடாக்கள் இது தொடர்பில் இருதரப்பு எம்.பிகளுக்கும் அறியப்படுத்த வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

பெண்களை அவமதிக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து இடம்பெற்றால், நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் அந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பேன் எனவும் எச்சரித்தார்.

ஆனால் அதன் போது கூட திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி தனது கருத்தில் எவ்வித தவறுகளும் இல்லை. தான் சரியான கருத்துகளையே முன்வைத்தேன். அதைக் கேட்பவர்கள் தவறான முறையில் கேட்டால், அதற்கு தான் பொறுப்பில்லை என எகத்தாளமாக தெரிவித்தார். இந்த நிலையில், பாராளுமன்றத்துக்குள்ளேயே எதிர்கட்சியினரால் திஸ்ஸ குட்டியராச்சி மீது தாக்குதல் நடத்த முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினமான நேற்று முன்தினம் (25) 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து' என்ற ஸ்டிக்கர் அணிந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் எதிர்ப்பினை வெளிகாட்டியிருந்தனர்.

அதுமட்டுமின்றி, பாராளுமன்றத்தில் மோசமாக செயற்பட்டுகொண்டிருக்கும் ஆளுங்கட்சி எம்.பி திஸ்ஸ குட்டியாராச்சியின் மனநலம் தொடர்பில் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள சபையில் கோரிக்கை விடுத்ததுடன், திஸ்ஸ குட்டியாராச்சிக்கு சபாநாயகர்




தண்டனை வழங்கவில்லை என்றால், இந்த விடயத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்வோம் எனவும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷமன் கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தாலும் ஆளுங்கட்சியிருந்து எவரும் இது குறித்து, வாய் திறக்கவில்லை என்பது ஆச்சரியத்தை வரவழைக்கவில்லை.

மேலும் ஒருவர் எந்த நிலையில் இருந்தாலும் அவரது வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் அவரது புத்திசாலித்தனம், கல்வித்தரம் எவ்வாறு என்பதை திஸ்ஸ குட்டியாராச்சி மேலும் பாராளுமன்றத்தில் உறுதிபடுத்தியுள்ளதாக கபே அமைப்பும் சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையில் உலகின் முதலாவது பெண் பிரதமரையும் நிறைவேற்று அதிகாரமுடைய பெண் ஜனாதிபதி, பெண் நீதியரசர் உள்ளிட்டோரை உருவாக்கிய எமது நாட்டின் அரசியலில், பெண்களின் பங்களிப்பு என்பது ஆண்களை விட 60 சதவீதம் குறைவாகவுள்ளது. உண்மையில் பெண்களுக்கு அரசியலில் பங்களிப்பு செய்வதற்கு ஆசை இருந்தாலும் இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு பயந்தே தமது அரசியல் ஆசைகளை அடியோடு மறந்து விடுகின்றனர்.

'பெண்களுக்கு எதிரான வன்முறையை இப்போதே ஒழிக்கவும்' எனும் தொனிபொருளில் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டாலும் வருடங்தோறும் உலகளாவிய ரீதியில் மூன்றில் ஒரு பகுதியினர் வாழ்நாளில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதுடன், தற்போதைய கொரானா தொற்று உள்ளிட்ட இன்னோரன்ன காரணங்களால் ஏதோ ஒருவகையில் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

உலகலாவிய ரீதியிலான கொரோனா முடக்கத்துக்குப் பின்னர், 13 நாடுகளை அடிப்படையாக வைத்து, ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்த ஆராய்ச்சிக்கு அமைய ஒவ்வொரு மூன்று பெண்களில் இருவர் சில வகையான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதாகவும் குறிப்பாக தினமும் 137 பெண்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்படுவதாகவும் ஐ.நாவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இவ்வாறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் 10 பெண்களில் ஒருவர் மாத்திரமே பொலிஸ் அல்லது வேறு துறையினரை நாடுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, சர்வதே மகளிர் தினம், பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிக்கும் தினம் என எத்தனை தினங்களை அனுஷ்டித்தாலும் அனைத்து வகையான பெண்களும் துஷ்பிரயோகம் மற்றும் நிர்ப்பந்தம் இல்லாத வாழ்க்கையை அனுபவிப்பதை உறுதி செய்ய ஒவ்வொரு நாட்டிலும் முயற்சி செய்யும் போதே, இவ்வாறு அனுஷ்டிக்கப்படும் தினங்களின் பலனை பெண்கள் அடையமுடியும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்.

## பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடு:

# பாத்திரமறிந்த உதவி



சுப்பிரமணியம்
பாஸ்கரன்











இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டு போர் காரணமாக, அதிக பாதிப்புகளையும் பொருளாதார நெருக்குதல்களையும் எதிர் கொண்ட சமூகமாக பெண்தலைமைத்துவ குடும்பங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான பாதிப்புகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர் கொள்ளும் சவால்களும் நெருக்கடிகளும் இன்று அவர்களைப் பெரும் பொருளாதார நெருக்களுக்குள் தள்ளியுள்ள அதே நேரம், சமூகத்தால் அவர்கள் மீது ஏற்படுத்தப்படுகின்ற உடல் உள ரீதியான நெருக்குதல்கள், கவலை அளிப்பனவாக இருக்கின்றன.

இவ்வாறான நெருக்குதல்களில் இருந்து, இவர்களைப் பாதுகாப்பதற்கு பொருளாதார ரீதியில் முன்னேற்ற வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் காணப்படுகின்றது. 2018ஆம் ஆண்டில், வடக்கு மாகாணத்தில் சுமார் 63 ஆயிரத்து 345க்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இருப்பதாக, வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் தகவல்கள் குறிப்பிட்டிருந்தன.

யுத்தத்தினால் கணவனை இழந்த அல்லது காணாமல் போன, கணவனால் கைவிடப்பட்டவர்கள் என அதிகளவான இளம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றன என, பெண்கள் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் மட்டுமல்லாது, பொதுவாகவே பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் சுய பொருளாதாரத்தில் அவர்களைத் தாங்கி நிற்கக் கூடிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இன்று வரைக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள், வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், அவர்களுக்கான சரியான வழிகாட்டுதல்கள் இல்லாத காரணத்தால் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றார்கள்.

தற்போது, ஒரு இலட்சத்து 47ஆயிரத்து 421 பேர் வாழ்ந்து வரும் கிளிநொச்சி மாவட்டத்தில், ஒன்பதாயிரத்து 52 பெண் தலைமைத்து குடுமபங்கள் வாழ்வதாக மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியார் துறையில் வேலை செய்வது என்பது, பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அதாவது அவர்களுக்குரிய வேதனம் கிடைக்காமை, நீண்ட நேரம் வேலைக்கு அமர்த்தப்படுதல், உடல் உள ரீதியான பாலியல் துன்புறுத்தல்கள் என பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம்கொடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இந்த நிலைகளில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணப்பாடு ஒவ்வொருவரிடத்திலும் வளர வேண்டும். கடந்த 10 ஆண்டுகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சுயமாகத் தங்களது சொந்தக்காலில் நிற்க கூடிய வகையில், அவர்களுக்கு ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்துகின்ற வகையில், பல்வேறு தொழில் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, ஆடைகளை உற்பத்தி செய்தல் என உள்ளூர் தொழிற்சாலைகளை நிறுவி, உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்தல், மா வகைகள் அரிசி மற்றும் தூள் வகைகள் என்பவற்றை உற்பத்தி செய்திருந்தாலும் அவற்றை சந்தைப்படுத்துவதில் பாரிய சவால்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுத்து, பல பெண்கள் சாதித்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது பெரும் தொழில் முயற்சியாளர்களாக தொழில் வாய்ப்பை வழங்குபவர்களாகத் திகழ்கின்றார்கள். தற்போதும் கூட கிராம மட்ட அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவிகளோடு சில சிறு தொழில் முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதாவது, காளான் வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றுக்குரிய சந்தை வாய்ப்பு கிடைக்கின்றதா என்பது கேள்விக்குறி?

பெண் தலைமைத்துவ குடும்பம், தாம் உற்பத்தி செய்யும் மரக்கறிகளைக் கூட சந்தைப்படுத்தக் கூடிய வசதி அவர்களது கிராமங்களில் இல்லாமை காரணமாக, அந்தப் பொருட்களை அருகிலுள்ள சந்தைக்குக் கொண்டு செல்லும்போது, மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதுடன், தரமற்ற பொருட்கள் என தட்டிக் கழிக்கப்படுகின்றது.

இவ்வாறு, தட்டிக்கழிக்கப்படும்போது அவர்கள் மனமுடைந்து, தமது உற்பத்திப் பொருட்களை வியாபாரிகள் கேட்கின்ற விலைக்கே விற்பனை செய்கின்ற அவலரநிலை காணப்படுகிறது. இதனால், அந்தத் தொழிலைச் செய்வதற்கு அவர்கள் முயற்சிக்காமல் கைவிட்டும்விடுகின்றார்கள். ஏனெனில், உரிய சந்தை இன்மையாகும்.

சில பெண் தலைமைத்துவ குடும்பங்கள், இன்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களாக இணைந்து, நீண்ட காலமாகத் தொழில் செய்துகொண்டு, கிடைக்கின்றன சம்பளத்தை வைத்து, தங்களுடைய குடும்பத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய எதிர்காலத்துக்காகச் சேமிப்பதற்கு அந்த வருமானம் போதாது. இன்று பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகின்றது. இதனால், நாளாந்தம் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே சென்றுகொண்டிருக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க, பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களை, சந்தைப்படுத்தக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி உட்பட ஏனைய பிரதேசங்களில் பனை ஓலைப் பொருட்களை உற்பத்தி செய்து விட்டு, அவற்றைக் கொண்டு சென்று சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சேதனப்பசளை உற்பத்தி செய்கின்ற ஒரு செயற்பாட்டை ஊக்குவித்து, தரமான சேதனப் பசளை உற்பத்தி செய்வதைக்கூட ஊக்குவிக்கலாம்.

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர் ஆகிய இடங்களில் அதிகளவான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வசிக்கின்றன; இவர்களது வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும்.

காளான் உற்பத்தியில் ஈடுபடும் பெண் ஒருவருடன் பேசிய போது, தன்னிடம் இருக்கின்ற காளானை, வெளியிடங்களுக்குக் கொண்டு சென்று சந்தைப்படுத்த முடியாத சூழல் காணப்படுவதாகத் தெரிவித்தார். மேலும், வெளியிடங்களுக்குக் கொண்டு சென்றால், நல்ல சந்தை வாய்ப்பு இருக்கின்றது. ஆனால், அதை கொண்டு செல்வதற்கான வசதி தன்னிடம் இல்லை என்றும் நாளாந்தம் தனது கிராமத்திலுள்ளவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கி வருவதாகவும் அது தன்னுடைய உற்பத்திக்கு ஏற்ற சந்தை வாய்ப்பு இல்லை என்றும் தெரிவித்தார்.

இது போல, நீண்டகாலமாக கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்ற பெண் ஒருவர் தெரிவிக்கும் போது, "என்னால் இந்தக் கோழி வளர்ப்பை மேற்கொள்ள முடியவில்லை. காரணம், சந்தைப்படுத்துவதில் பாரிய பிரச்சினை இருக்கிறது. ஆகவே, இதைப் பெரிய அளவில் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இதற்காக நேரத்தைச் செலவழித்து, அதில் வருகின்ற வருமானம் மிகக் குறைவாகவே உள்ளது. ஆகவே, நானும் நாளாந்த கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றேன்" என்று கூறினார்.

மிளகாய், அரிசி என்பவற்றை மாவாக்கி, அவற்றைப் பொதி செய்து விற்பனை செய்து வந்த முயற்சியாளர் ஒருவர், இப்போது தனது முயற்சியைக் கைவிட்டுள்ளார். அவரிடம் வினவிய போது, "எனது உற்பத்திப் பொருட்களை உள்ளூர் கடைகளில்க்கூட விற்பனை செய்ய முடியதவில்லை. காரணம், உள்ளூர் உற்பத்திப் பொருள் என்பதால், அதனுடைய பொதி வடிவமைப்பு கவர்ச்சிகரமாக இல்லை. ஆனால், உள்ளிருக்கும் பொருள் மிகவும் தரமாக இருக்கின்றது. தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்படுகின்ற அல்லது, வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்ற பொருட்கள் தரமில்லாவிட்டாலும், கவர்ச்சிகரமாகப் பொதி செய்யப்பட்டு இருப்பதால் அவற்றை மக்கள் வாங்குகிறார்கள். இந்தப் பொருட்களை, கவர்ச்சிகரமாகப் பொதி செய்து, வெளயூரில் சந்தைப்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்" என்று தெரிவித்தார்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை, சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு சரியான வழிகாட்டுதல்கள் இல்லை. சரியான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காமல், மேலும் முதலீடுகளைச் செய்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதால், பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கிய பெண்கள், பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றார்கள்.

இவற்றுக்குச் சரியான சந்தை வாய்ப்பு, சரியான நெறிப்படுத்தல் என்பன மிக முக்கியமானதாகத் தேவைப்படுகின்றது. ஆகவே, கிராமப்புறங்களில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அவர்களது நலிவுத் தன்மைகளை விளங்கிக் கொண்டு, அவர்களுக்கு வாழ்க்கை மேம்படக்கூடியவாறான உதவிகள் வழங்கப்படவேண்டும்.


நேர்த்தியான திட்டமிடல்கள் இல்லாது, வாழ்வாதார உதவிகளை கொண்டுவருவதையோ, குறுகிய காலத்துக்கு உதவிகளை வழங்குவதையோ விடுத்து, அவர்களது வாழ்வாதாரத்துக்கு தேவையானவைகளை முழுமையாக ஆராய்ந்து, அவர்களுக்கு உதவிகளை முன்னெடுக்க வேண்டும் என்துடன் இவ்வாறான செயற்றிட்டங்கள் நீண்ட காலத்துக்குப் பயன்தரத் தக்கவகையிலும் அமையவேண்டும்.

கலிங்கமாகன் பற்றிய

# முக்கிய கல்வெட்டு

## அண்மையில் கண்டறியப்பட்ட தமிழர் வரலாறு





கலாநிதி கா. இந்திரபாலா

திருகோணமலை மாவட்டத்தில் கொமரன்கடவெல (குமரன்கடவை) என்னும் இடத்திலுள்ள காட்டில் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) தலைமையில் ஓர் ஆய்வுக் குழுவினர் முக்கிய கல்வெட்டு ஒன்றை அண்மையில் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

தொடக்கத்தில் உள்ள சில சம்ஸ்கிருத வரிகளைத் தவிர ஏனைய வரிகள் தமிழில் உள்ளன. பாறையில்எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டின் பல சொற்கள் அழிந்துவிட்டன. கோவில் ஒன்றுக்குக்கொடுக்கப்பட்ட சில தானங்களைப் பதிவுசெய்வதே கல்வெட்டின் நோக்கம். இக் கோவிலின் அழிபாடுகள்அங்கு காணப்படுகின்றன.

தானங்களை வழங்கி, இக்கல்வெட்டைப் பொறிப்பித்தவன் பெயர் ஸ்ரீகுலோத்துங்க சோழகாலிங்கராயன் என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவன் 'ஈழமண்டலமான மும்முடிசோழ மண்டலம் எறிந்து' அதாவது, இலங்கையை கைப்பற்றி, கங்கராஜகாலிங்க விஜயவாகு தேவர் என்பவருடைய வீராபிஷேகத்தையும் செய்தான் என்ற செய்தியும் இதில் கொடுக்கப்பட்டுள்ளது. இச்செய்திதான்இக்கல்வெட்டுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது.

### கங்கராஜா

யார் இந்தக் கங்கராஜகாலிங்க விஜயவாகு தேவர்? நீண்ட காலமாக இந்தியாவின் பல பாகங்களில்கங்கவம்சத்தைச் சேர்ந்தோராகத் தம்மைக்கருதிய சிலர் கங்கராஜா என்ற பெயரைப்பெற்றிருந்தனர். வணிகம் வழியாக இந்தியச் செல்வாக்கு வெளியே பரவிய காலத்தில், தென்கிழக்காசியாவிலும் இப்பெயர் பரவியிருந்தது.

ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சம்பா என்ற வியட்நாமிய அரசில் ஆட்சி செலுத்திய முதலாம் பத்திரவர்மனுடைய மகன் ஒருவன் இப்பெயரைத் தரித்திருந்தான். இந்தியாவில் கங்கவம்சத்தினர் ஆட்சிசெய்த இடங்களில் பலர் இப்பெயரைத் தாங்கியிருந்தனர். எடுத்துக்காட்டாக, 12ஆம் நூற்றாண்டில் ஒரு ஹொய்சள (போசள) மன்னனுக்கும் பதினாறாம் நூற்றாண்டில் கர்நாடகத்து உம்மத்தூரு என்ற இடத்தின் நாயக்கச்சிற்றரசனுக்கும்இப்பெயர் இருந்தது. கங்க வம்சத்தைச் சேர்ந்தோராய் கிழக்கு இந்தியாவில் (இன்றைய ஒடிஷா மாநிலத்தில்) ஆட்சி புரிந்தோரைக் கீழைக்கங்கர் என்பர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பொலன்னறுவை அரசியலில் முக்கியத்துவம் பெறும் பல இளவரசர்களும்இளவரசியரும் கலிங்கத்திலிருந்து வந்த கங்கவம்சத்தினர். கல்வெட்டுக்களில் சிலருடைய பெயருடன் வம்சம் குறிப்பிடப்பட்டுள்ளது (எடுத்துக்காட்டாக, நிஸ்ஸங்கமல்லனுடைய அரசியருள் ஒருவர் கங்க வம்ஸ கல்யாண மஹாதேவி எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்). ஆகவே கங்கராஜா என இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுபவர் கங்க வம்சத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவு.

### காலிங்க விஜயவாகு

பொலன்னறுவையில் இருந்து ஆட்சி நடத்திய காலிங்க மன்னர்கள் முன்பு இருந்த சிங்கள மன்னர்களைப்போல், 'வாகு' என முடியும் பெயர்களையும் பொதுவாகச் சூடியிருந்தனர். நிஸ்ஸங்கமல்லன், பராக்கிரமவாகு என்ற பெயரையும், அவனுக்குப் பின் ஆண்ட இருவர் வீரவாகு, விக்கிரமவாகு என்ற பெயர்களையும் பெற்றிருந்தனர். நிஸ்ஸங்கமல்லன் சகோதரனாகிய ஸாஹஸமல்லன் எனப்படும் மன்னன் காலிங்க விஜயவாகு எனக் கல்வெட்டு ஒன்றில் குறிபிடப்பட்டுள்ளான்.



கொமரன்கடவெலக் கல்வெட்டில் வரும் விஜயவாகு இவனா? இக்கல்வெட்டின் காலம் என்ன என்று தெரிந்தால் இவ்வினாவுக்கு விடை காண்பது இலகு. துரதிர்ஷ்டவசமாக கல்வெட்டின் ஆண்டைக் கூறும் தொடக்கப் பாகம் தெளிவற்றுக் காணப்படுகின்றது. எனினும் ஸாஹஸமல்லனுடைய கல்வெட்டின் சான்றினை வைத்து இப்பிரச்சினையைத்தீர்க்கலாம்.

இதன்படி, இங்கு ஆராயப்படும்கல்வெட்டின் விஜயவாகுஸாஹஸமல்லன் அல்லன் என்று கூறமுடியும். கல்வெட்டில் ஸாஹஸமல்லன் கூறுவது இதுவாகும்: நிஸ்ஸங்கமல்லனுக்குப் பின் பொலன்னறுவையில் ஆட்சி நடத்துவதற்கு அவனுடைய சகோதரன் (ஒரே தகப்பன், தாய் வேறு) ஸாஹஸமல்லனுக்கு (கலிங்கநாட்டு ஸிங்ஹபுரத்துக்கு) இரு சிங்கள அமைச்சர்கள் தூது அனுப்பினர். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, அவன் இலங்கைக்குப் புறப்பட்டான். வரும்போது சோழநாட்டுத் துறை ஒன்றில் சிறிது காலம் தங்கி இலங்கைக்கு வந்து முடிசூட்டப்பெற்றான். தன்னை அழைத்து மன்னனாக்கியதற்காக அமைச்சர் இருவருக்கும் தானங்கள் வழங்கி, ஒருவனுக்கு முதல் அமைச்சர் பதவியையும் ஸாஹஸமல்லன் வழங்கினான். தனக்குச் சோழர் படையுதவி கிடைத்தது பற்றி எதுவுமே அவன் கல்வெட்டில் இல்லை. இதற்கு முற்றிலும் மாறாக, கொமரன்கடவெலக் கல்வெட்டில் வரும் காலிங்க விஜயவாகு முடிசூட்டப் பெற்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

அப்படியாயின் யார் இந்த விஜயவாகு? இவ்வினாவுக்கு விடைகாணச்சிங்கள இலக்கியச் சான்று உதவுகின்றது. பொலன்னறுவை அரசை 1215இல் கைப்பற்றிய கலிங்கமாகனுக்குக் காலிங்கவிஜயவாகு என்ற பெயரும் இருந்தது என்பது நிகாயஸங்க்ரஹய



மற்றும் ஸத்தர்ம-ரத்னாகரய ஆகிய நூல்களில் இருந்து தெரியவந்த விஷயமாகும். அத்துடன், இலக்கிய மூலாதாரங்கள் அனைத்தும் தென்னிந்தியப் படைகளின் உதவியுடன் மாகன் வெற்றிபெற்றான் என்று கூறுகின்றன.

இங்கு ஆராயப்படும் கல்வெட்டில், காலிங்கவிஜயவாகு குலோத்துங்க சோழ காலிங்கராயன் தலைமையிலான படையின் உதவியுடன் அரசைக் கைப்பற்றி மன்னனாகிய செய்தி கூறப்பட்டுள்ளது. இவற்றைக் கொண்டு, இந்த காலிங்கவிஜயவாகு வேறு யாரும் அல்ல; கலிங்கமாகனே என அடையாளம் காணமுடிகின்றது.

### காலிங்கராயன்

காலிங்கவிஜயவாகு ஆகிய கலிங்கமாகனின் படையெடுப்பில் மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178 - 1218) ஆகிய சமகாலச் சோழ மன்னனுக்கும் பங்கு உண்டு என்று தோன்றுகிறது. விஜயவாகுவுக்கு உதவிய படைத்தலைவன் ஒரு சோழத் தளபதி என்று கொள்ள இடமுண்டு. இவன் முழுப் பெயர் 'குலோத்துங்க சோழகாலிங்கராயன். இப் பெயர், சோழமன்னர் தங்கள் படைத்தலைவர்கள், குறுநிலமன்னர், அதிகாரிகள் ஆகியோருக்கு பொதுவாக வழங்கிய விருதுப்பெயர்களை ஒத்துள்ளது. எடுத்துக்காட்டாக, குலோத்துங்க சோழகாடவராயன், குலோத்துங்க சோழகச்சியராயன், குலோத்துங்க சோழவாணக்கோவரையன், குலோத்துங்க சோழசாம்புவராயன், குலோத்துங்க சோழதகடாதிராயன் போன்ற பெயர்களை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

முதலாம் குலோத்துங்க சோழனுடைய தளபதிகளுள் மிகவும் வெற்றி ஈட்டிய ஒருவனாகிய நரலோக வீரனுக்கு காலிங்கராயன் என்ற விருது வழங்கப்பட்டிருந்த தையும்கவனிக்கலாம். அத்துடன், மூன்றாம் குலோத்துங்கசோழன்இலங்கையைக் கைப்பற்றப் பல தடவை முயன்றிருந்தான் என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும். பொலன்னறுவை அரசு பொதுவாகச் சோழ அரசை எதிர்த்துப் பாண்டிய அரசுக்கு உதவிபுரிந்தது. இக்குலோத்துங்க சோழன் காலத்திலும் இந்த நிலைமை தொடர்ந்தது.

ஈழத்துப் படைகளை வெற்றி கொண்டதாகக் குலோத்துங்கன் தன் கல்வெட்டுக்களில் பல தடவை கூறுகின்றான். சோழருக்கு எதிராகப் பாண்டியருக்கு உதவிசெய்ய இலங்கை மன்னன் தென்னிந்தியாவுக்கு அனுப்பிய படையை 1187இல் வெற்றிகொண்டதாகக் கூறும் குலோத்துங்கன், அதன் பின்னர் இலங்கைக்குத் தன் படையை அனுப்பி வெற்றிகொண்டதாகக் கல்வெட்டுக்கள் வாயிலாகத் தெரிவிக்கின்றான்.

'ஈழத்தாந் முடி வாழ வாழத்தாளிணை சூட்டி... மதிரையும்ஈழமுங் கொண்டு' (திருமாணிக்குழிக் கல்வெட்டு) என்றெல்லாம் சோழமன்னன் தன் வெற்றியைப் புகழ்ந்து கூறுகின்றான். இலங்கையைத் தாக்குமாறு 1194இல் குலோத்துங்கன் தன் படைகளுக்கு ஆணை இட்டான் என்றும், பின்னர் 1199இல் மீண்டும் இலங்கைக்குப் படை அனுப்பப்பட்டது என்றும் அறிகின்றோம்.

இக் காலகட்டத்தில் இப்படிப்படையெடுப்புகள் நடந்தன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அக்காலத்தில் எழுதப்பட்ட 'ஸஸதாவத' என்ற சிங்கள நூல் சோழநாட்டில் இருந்து மூன்று படையெடுப்புகள் நடந்தன என்று கூறுகின்றது. மினிபே மற்றும் போபிட்டிய ஆகிய இடங்களில் கிடைத்த சிங்களக் கல்வெட்டுகளிலும் சூளவம்ஸத்திலும் இப்படையெடுப்புகள் பற்றிய சான்று வெளிப்படுகின்றது.

குலோத்துங்கன் இறுதியாக இலங்கைக்குப்படையனுப்பியது பற்றி 1212இல் பொறித்த கல்வெட்டால் அறிகின்றோம். கலிங்கமாகனின் தாக்குதல் இதற்கு மூன்று ஆண்டுகளின் பின் நடைபெற்றது. இவற்றை எல்லாம் நோக்குமிடத்து காலிங்கராயன் என்பவன் சோழ மன்னனின் தளபதியாகப் படையுடன் வந்தவன் என்ற முடிவுக்கு வருவது தவிர்க்கமுடியாதது. மேலும் ஒரு முக்கிய விஷயத்தை இம்முடிவுக்குச்சார்பாகக் கூறவேண்டும்.

(மிகுதி அடுத்த சனிக்கிழமை தொடரும்)

# குளத்தை கெடுக்கும் குடி

## சந்ததியிடம் முழுமையாக எதைக் கையளிக்கப் போகின்றோம்?

க. அகரன்



'இயற்கையை இரசிக்கத்தெரிந்தவன் வாழ்க்கையில் இன்பத்தை அடைகிறான்' என்பது போல், இயற்கையை மனிதன் இரசிக்க மட்டுமல்ல; பேணவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த வகையில், மன்னர் ஆட்சிக் காலங்களில் நீர் வழிந்தோடும் பிரதேசங்களை அடையாளம் கண்டு, நீர் நிலைகளையும் பாரிய குளங்களையும் அமைத்து, நீரைத்தேக்கி விவசாயத்துக்கு நீரைப் பயன்படுத்த எவ்வாறு வாய்ப்பளித்தார்களோ, இதேபோன்று பல அளப்பரிய கொடைகளை இந்த உலகுக்குக் கொடுத்திருந்தார்கள்.

இந்த வகையில், இலங்கையின் நீர் மூலாதாரத்துக்குக் காரணமான அக்கால ஆட்சியாளர்கள் போல் தற்போது ஒருவரேனும் புதிதாக குளங்களை அமைத்ததாக தெரியவில்லை. அமைக்கப்பட்ட குளங்களை கூட தூர்வாரி விவசாயத் தேவைக்கு பயன்படுத்துவதற்கு போதிய முனைப்புகளும் காட்டப்பப்படுவதாகத் தெரியவில்லை.

வவுனியா மாவட்டத்தில் சுமார் 890 இற்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன. எனினும் இந்தக் குளங்களில் 226 குளங்கள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன. இதற்குமப்பால் 22 அணைக்கட்டுகள் காணப்படுகின்றன. எனினும் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள குளங்களை மக்கள் எவ்வாறான நிலையில் பயன்படுத்துகின்றார்கள் என்பதே தற்போதைய கேள்வியாக உள்ளது.

ஏனெனில், வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள குளங்கள் பல, விவசாயத்துக்கு மாத்திரமின்றி மக்களின் பொழுது போக்குக்காகவும் பயன்படுத்துப்பட்டு வரும் நிலையில், இந்தக் குளங்கள் இன்று மிகவும் அசுத்தமாக மாறி வருகின்றமை பெரும் அபாயமாகவுள்ளது.

வவுனியா குடியிருப்பு குளம் நகர மத்தியில் அமைந்துள்ள நிலையில், குறித்த குளம் 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுத்தமான நீர் நிலையாகக் காணப்பட்ட போதிலும் 1995ஆம் ஆண்டுக்குப் பின்னரான வவுனியா நகரில், மக்களின் செறிவு வர்த்தக நிலையங்களின் வளர்ச்சி காரணமாக, குளத்துக்குள் அதிகளவான கழிவுகள் வரத்தொடங்கின. இந்நிலைமையால் இன்று அசுத்தமான குளமாக மாறிவருகின்றமையை கண்கூடு, விசனத்துடன் காண முடிகிறது.



இதற்குமப்பால் குறித்த குளத்துக்குள் நகர்ப்பகுதியில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வரும் எண்ணைக்கழிவுகள் உட்பட ஏனைய ஆபத்தான கழிவுகளும் வருவதனால் இன்று குறித்த குளத்தின் நீரின் தன்மை மாற்றமடைந்து காணப்படுகின்றது.

இந்நிலையினை மாற்றுவதற்காக கழிவு நீர் வரத்து பகுதியில் கடந்த காலத்தில் நீர்ப்பாசன திணைக்களத்தினால் 4 சுத்திகரிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்ட போதிலும் அவை நீண்ட காலமாக செயற்படாத நிலையில் காணப்பட்டது. பின்னராக அவை இயங்கச்செய்யப்பட்ட போதிலும் தற்போது அது செயற்படுகின்றதா என்ற கேள்விக்கு மத்தியில் குறித்த பகுதியில் நகர சபையினால் மண் இடப்பட்டு பூங்கா அமைக்கப்பட்டது.

வவுனியாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய குறித்த பூங்கா இன்று நகர சபைக்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையிலான முரண்பாட்டால் நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

இதேபோன்று, பாவக்குளம், தாண்டிக்குளம், மருக்காரம்பளை உட்பட கிராமிய குளங்கள் வேறு விதமான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. கிராமங்களை அண்டிக்காணப்படும் இக்குளங்கள், மிகவும் அழகாகவும் மரங்கள் சூழ்ந்த பகுதியாகவும் காணப்படுகின்றபேதிலும் அதனை இரசிக்கத்தெரியாத சில மனிதர்களால் அக்குளங்கள் பாரிய சோதனைகளை சந்திக்க நேர்ந்துள்ளது.

மதுப்பிரியர்களின் சொர்க்காபுரியாக தற்போது வலம் வரும் குறித்த கிராமிய குளங்களினுள் உடைந்த மதுப்போத்தல்களும் மதுசார தகர போத்தல்களும் நிரம்பிக் காணப்படுகின்றன.

கிராம மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து அவர்களின் நீர் தேவையின் 75 சதவீதத்தினை ஈடு செய்த குளங்களில் இன்று கிராமத்தவர்கள் இறங்கி குளிப்பதற்கும் குளத்தினை பயன்படுத்துவதற்கும் அச்சப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. அதற்கு காரணம் மதுப்போத்தல்களின் உடைந்த துகள்கள் அவர்களின் கால்களில் பாரிய காயங்களை ஏற்படுத்துகின்றன.

அது மாத்திரமின்றி கால்நடைகள் கூட இந்த உடைந்த மதுப்போத்தல் துகள்களால் காயங்களுக்குள்ளாகி பராமரிக்க முடியாமையினால் இறந்து விடும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

இது மாத்திரமின்றி, நன்னீர் மீன்பிடிப்பாளர்களும் சொல்லணா துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குளத்தினுள் சென்று வலைகளையோ துண்டில்களையோ பயன்படுத்த முடியாமலும் அவ்வாறு போடப்பட்ட வலைகள் கண்ணாடி துண்டுகளால் துண்டாக்கப்படுவதையும் அவர்கள் சொல்லித்தாங்க முடியாத நிலையில் உள்ளனர்.

கூடிக்குலாவித் திரிந்த இடங்களும் குளங்களும் இன்று நரகமாக மாறி வருவதனை குளத்தினை அடிப்படையாக வைத்து வாழ்ந்தவர்களால் தாங்கி கொள்ள முடியாத நிலையில் குறித்த குளங்களை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தனி மனிதனது பொறுப்பு என்பதனை உணரத்தலைப்பட வேண்டும்.

அதற்குமப்பால் பொது இடங்களில் மதுபான பாவனை தடை செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான அநாகரிய செயலில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே குளங்களை ஏதோவொரு வழியில் பயன்படுத்தும் மனிதர்கள் மாத்திரமின்றி இயற்கை விரும்பிகளினுடைய அவாவாக உள்ளது.





# சிறப்புரிமைக்குள் புகுந்துகொண்டு விளையாடும் ஒழுக்கச் சீர்கேடுகள்

சட்டவாக்கச் சபையில் சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்டதன் பின்னர், சபாநாயகர் கையொப்பமிட்ட திகதியிலிருந்து அது சட்டமாகிறது. அவ்வாறான சட்டங்களில், காலவோட்டத்துக்கு ஏற்றவகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது, எதனை உறுப்பினர்கள் மிகச்சரியாக தர்க்கரீதியில் விவாதித்தனர் என்பதற்கெல்லாம் 'ஹன்சாட்' சாட்சியமாகும்.

பிரதான சட்டமான அரசியலமைப்பில், இதுவரையிலும் 20 தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆட்சிப்பீடமேறும் அரசாங்கங்கள் தங்களுடைய ஆட்சியை தக்கவைத்துக்கொள்ளும் வகையிலும் திருத்தங்களைச் செய்துள்ளன. நல்லாட்சியின் போது அரசியலமைப்பை திருத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, "அரசியலமைப்பை திருத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்றார். மீயுயர் சபையில் இரு பக்கங்களிலும் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள், திறந்த மனதுடன் செயற்படாவிடில், அரசியலமைப்பு திருத்தத்தை ஒருபோதும் எதிர்பார்க்கவே முடியாது.

நல்லாட்சியின் போது முன்னெடுக்கப்பட்ட செயற்பாட்டை கடுமையாக விமர்சித்த இன்றைய ஆட்சியாளர்கள், "பௌத்தத்துக்கு வழங்கப்பட்டிக்கும் முன்னுரிமை இல்லாமற் செய்யப்படுகின்றது", "நாட்டைத் துண்டாடும் வகையிலான யோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன" என்றெல்லாம் மிகத் தீவிரமாக பிரிவினைவாத சிந்தனைகளை விதைத்திருந்தமையை மறுதலிக்கமுடியாது.

பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களை மிகக்கவனமாக செவிசாய்த்தோமெனில், எத்தனை பிரதிநிதிகள் விடயத்தானத்துடன் உரையாற்றுகின்றனர்; தர்க்கிக்கின்றனர், மறுதலிக்கின்றனர் என்பதெல்லாம் புலனாகும். ஆனால், சேறுபூசும் பேச்சுகளையே கேட்கக்கூடியதாய் இருக்கிறது என்றால் தவறே இல்லை.

ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியராச்சியின் உரையில் சபைக்கு பொறுத்தமற்ற, வெறுக்கத்தக்க சொற்களைப் பயன்படுத்தியிருந்தார். இதனால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் வன்மையாக கண்டித்திருந்தார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர் 25ஆம் திகதியன்று ஐக்கிய மக்கள் சக்தியினரும் சபைக்குள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 'பெண்களுக்கெதிரான வன்முறைகளை நிறுத்து' எனும் வாசகம் எழுதப்பட்டிருந்ததை அணிந்திருந்தனர். ஆளும், எதிர்க்கட்சி என்ற பேதங்களை மறந்து, பெண் எம்.பிக்கள், செவ்விளநீர் நிறத்திலான சாரியை அணிந்து, விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர்.

சிறப்புரிமைகள் எனும் போர்வைக்குள் நுழைந்துகொள்ளும் எம்.பிக்கள் பலரும் விழிப்புணர்வையெல்லாம் கவனத்தில் கொள்ளமாட்டார்கள். பாராளுமன்ற உரைகள் செம்மையாக்கப்படாது, நேரடியாக ஒளிப்பரப்பு செய்யப்படுவதால், 'தங்களால் வாக்களிக்கப்பட்டவரா இவ்வாறு பேசுகின்றார்' என, மக்கள் கணிப்பீடு செய்துகொள்வர்.

ஆனால், செம்மையாக்கப்படாமையால், எதிர்க்கால சந்ததியினரும் ஒழுக்கச் சீர்கேட்டுடன் நடந்துகொள்ள முயற்சிக்கக்கூடும். இது சமூகத்துக்கு பெரும் பாதிப்பாகும் என்பதால், அளந்து பேசுவதே, யாவருக்கும் நலமாகும் என்பதை வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தனது வீடு, கிராமம், நகரம் எனும் எண்ணங்களில் மட்டும் அடைபட்டுக்கிடக்கும் மக்கள், அந்த வட்டத்தில் இருந்தும் பார்க்காது, பரந்தளவில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தியே ஆகவேண்டும்.

உலகம் பரந்தது; கல்வி, கேள்வி எனும் கொடைகளை அனைவரும் பகர்ந்து கொள்வதால், உலகமே நமது வீடு போலாகிவிட்டது.

மக்களுடன் இணைந்து வாழ்வதே முழுமை பெறும். எனினும் சுஅறியாமை காரணமாக, அநேகர் விலகி வாழ்வதுண்டு. ஒரு வட்டத்துக்குள் சுருங்கும் நிலை வரலாகாது.

நாடுகள் பூராவும் உறவுகள், நட்புகளை விஸ்தரிக்க வேண்டும். அதற்கான வழிகள், வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைய தொழில்நுட்பங்கள் மூலம் இதனை இலகுவாக்கிக் கொள்ளலாம்.

இன்று பலநாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் மூலம் எமது சொந்த நாட்டில். கிளைகள் உருவாக்கப்படுகின்றன. நாங்கள் எவ்வளவுதான் முன்னேறினாலும், எங்கள் பாரம்பரியங்கள், கலாசார ஒழுக்கநெறிகள், கலைகள், பண்புகளை விலக்கி வாழக்கூடாது. எமது சொந்த மண் எமக்கு உரித்தானது. பழைமையின் வேர்கள் அழியாதவை; ஸ்திரமானவை. உணர்க!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நிரந்தர வைத்தியரை நியமியுங்கள்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் டொக்டர் ஒருவர் இரவில் பணியில் இல்லாததன் காரணமாக, நோயாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

ஐயன்கன்குளம் வைத்தியசாலைக்கு வைத்தியராக நியமிக்கப்பட்டவரே நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் வாரத்தில் ஐந்து நாள்கள் பகலில் பணியில் இருப்பதாகவும் இரவு வேளைகளில் நோயாளர்கள் சென்றால் அம்புலன்ஸ் மூலம் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும் நோயாளர்கள் சென்றவுடன் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அம்புலன்ஸ் சாரதிக்கு தொலைபேசி மூலம், "நோயாளர்கள் வந்து விட்டார்கள்; வாருங்கள்" என்ற அழைப்பு கிடைத்தவுடன் அம்புலன்ஸ் சாரதி வைத்தியசாலைக்கு வந்து, நோயாளர்களை மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், தனிப் பிரதேச செயலாளர் பிரிவான மாந்தை கிழக்கில் 3,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில், நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு, கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பவற்றில் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் பயன்கள் ஏற்படவில்லை. முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாந்தை கிழக்கு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

- நடராசா கிருஸ்ணகுமார்

# தமிழ்த் தேசிய பரப்பில் அலை மோதல்

லக்ஸ்மன்.

தமிழர்களின் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டம், அடக்கப்பட்டமைக்கும் வெற்றியை எட்டிவிடாமைக்கும் சொல்லப்படுகின்ற காரணங்களுக்கு ஏற்றதாகத்தான் தமிழரசுக் கட்சி நடந்து கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகம் எல்லோர் மத்தியிலும் எழத் தொடங்கியிருக்கிறது.

ஆதிக்கமும் அடக்குமுறையும் எந்த வெற்றியையும் நிரந்தரமாகப் பெற்றுவிடுவதில்லை. தமிழர்களின் விடுதலை வேட்கையானது, இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு, கொதித்துக் கொண்டே இருக்கிறது. இந்தக் கொதிப்பைத் தணிக்கும் நடவடிக்கைதான் இதுவரையில் கிடைக்கவில்லை. ஆனால், இப்போது 70 வருடங்களிலும் நடைபெறாத ஒன்றை, சிங்கள மக்களின் ஆதரவு கிடைக்கவேண்டும் என்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் கனடாவில் கூறியிருக்கிறார்.

கடந்த சில வருடங்களாக, இந்தக் கருத்தை அடியொட்டி அவர் பல கருத்துகளை வெளியிட்டிருக்கிறார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று சொல்லிக் கொண்டு, அமெரிக்கா சென்று வரும் வழியில், அதன் பங்காளிக் கட்சிகளுக்கே தெரிவிக்காமல் கனடாவில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே இந்தக் கருத்துக்களை பகர்ந்திருக்கிறார். அங்கு அவருக்கு மரியாதை கொடுக்கப்படவில்லை; அவமானப்படுத்தி விட்டார்கள். தரக்குறைவான வார்த்தைகளைப் பிரயோகித்திருக்கிறார்கள். இது அது சரியா தவறா என்பதற்கு அப்பால், அரசியல் நிலைமையைப் பார்க்கலாம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது, அன்றைய தேவை கருதிய வெறும் தேர்தல் கூட்டாக உருவாக்கப்பட்டதல்ல. அதையும் தாண்டியதான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில், தமிழர்களின் ஒன்றுபட்ட ஜனநாயகக் குரலாக இருப்பதேயாகும்.

தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் கொள்கைகள், அவற்றை அடைகின்ற வழிகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டதாகும். தமக்குள் பிரிந்துநின்று, தமக்குள் சண்டையிட்டு, இழப்புகள் பலவற்றைச் சந்தித்ததே தமிழர்களின் போராட்ட இயக்கங்களின் வரலாறாகும்.

இந்தச் சகோதரச் சண்டைப் போராட்ட மனோபாவங்களை உதறித்தள்ளி, தேர்தலில் ஓர் அணியாக நின்று, தமிழ் மக்களின் தேசிய ஒற்றுமையை வெளி உலகுக்குக் காண்பித்து, அடிப்படை இலக்கில் மாற்றமின்றிச் செயற்படுதல் என்ற ஒருமிப்புடன், ஒரு புள்ளிக்கு வந்து செயற்பட்டனர். ஆனால், விடுதலைப் புலிகளின் முடிவுடன், கூட்டமைப்பில் சிலர் பிரிந்து சென்றதும், பிரிந்து செல்வதற்கான வழிகளை ஏற்படுத்தியதும் வரலாறாகும்.

வரலாறுகளாகப் பல சம்பவங்களைப் பதிந்து வைக்கின்ற செயற்பாடுகளை மாத்திரம் நடத்திக் கொண்டு, நாம் காலத்தைக் கடத்திவிடாமல், அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து, சரி பிழை எவை என விமர்சன ரீதியாக ஆராய்ந்து பார்ப்பது எதிர்காலத்தில் தவறுகள் விடுவதைத் தவிர்ப்பதற்கு வழிகோலும். விடுதலைப் புலிகளுடைய கால கட்டத்தில், அவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட தவறுகளை, அச்சமனோநிலையாலும் தமிழர்களின் அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சிக்காகவும் இன்னும் பல காரணங்களுக்காகவும் பேசாதிருந்ததன் பிரதிபலனை, நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

அந்தவகையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கமும் அதன் பின்னரான விரிசலும் தமிழர்களின் அரசியலில் பல பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறது. அத்தோடு, இப்போது பல முயற்சிகளை வேறு கோணத்தில் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாட்டையும் கொண்டு வந்திருக்கிறது.

அதில் ஒன்றுதான், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) தமிழ் பேசும் கட்சிகளை இணைத்துச் செயற்பட முனையும் கூட்டாகும். ஆரம்பத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான சிவராமினுடைய முயற்சியால், கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கம் இணைந்து, தமிழ்த் தேசிய தரப்பினரது இணைப்புக்காக முனைந்தனர். அந்த முயற்சியில் முதலில் கைகோர்த்தவர் டெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆவார். அந்தவகையில், இப்போது நிகழ்கின்ற தமிழ்த் தேசிய கட்சிகளை ஒருமிக்கச் செய்யும் முயற்சியைச் செயற்படுத்துவதற்கு அவர் பொருத்தமானவரே ஆவார்.

ஆனால், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எவ்வாறு அதனைச் செயற்படுத்த முடியும் என்றவாறான கருத்து முன்வைக்கப்படுவதுடன் தமிழரசுக் கட்சியும் மேலாதிக்கவாதத் தனமான கருத்துகளை முன்வைக்க முனைவது தவறான அணுகுமுறையாகவே பார்க்கப்படுகிறது. தமிழ்த் தேசிய அரசியலில், இரத்தமும் சதையும் போன்று அகிம்சையும் ஆயுதமும் இணைந்ததே என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது.

தமிழர்கள் என்கிற நாம், இதை மறந்து, தமிழர்களுடைய அரசியல் விடுதலைப் போராட்டத்தை நகர்த்த முடியாது. உண்மையில் நாம் எப்போது நம்மிடமிருக்கும் காழ்ப்புணர்ச்சிகளையும் வீண் வரட்டுக் கௌரவத் தனத்தையும் விட்டொழிக்கிறோமோ அப்போதுதான் தமிழர்களுக்கு விமோசனம் கிட்டும்.

கனடாவில் பேசியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், சிங்கள மக்களுடைய ஆதரவும் நமக்குத் தேவை என்ற தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார். கடந்த 70 வருடகால வரலாற்றை மறந்ததன் வெளிப்பாடா இந்தப் பேச்சு என்று சிலர் கேள்வி எழுப்பும் நிலையைக் கொண்டுவந்திருக்கிறது.

இதுவரை காலமும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், கிழித் தெறிப்புகள், எரிப்புகள் எல்லாவற்றையும் மீண்டும் பல தடவைகள் நாம் எல்லோரும் நினைத்துப் பார்க்க வேண்டும். இப்போதும் நாம், "அவர்கள் கொடுப்பார்கள்; கொடுப்பதற்கு உடன்படுவார்கள்" என்று நம்பிக்கொண்டிருப்பது பயனற்றதே. ஆனாலும், சுமந்திரனின் முயற்சி பலிக்க வேண்டும். ஏனென்றால், முயற்சிகள் இலக்குகளை இலகுவாக்கிவிடுமல்லவா?

இந்த இடத்தில்தான், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி தனித்துநின்று, இரகசியமாகப் பல முக்கிய முடிவுகளை எடுப்பது குறித்ததான பல விடயங்கள் ஆராயப்பட வேண்டும். ஆரம்பத்திலிருந்தே சின்னத்தைக் கொடுத்திருப்பவர்கள் தான் கட்டளையிடவேண்டும் என்ற நிலைப்பாடா தமிழரசுக் கட்சிக்குள் காணப்படுகிறது?

தமிழரசுக் கட்சியின் தொடர்ச்சியான செயற்பாட்டால், பிரிந்து சிதறிப் போயிருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிைப, ஒன்றிணைக்கும் பணியை டெலோ என்கிற ஆயுதப் பின்னணியைக் கொண்ட கட்சி எப்படி மேற்கொள்ள முடியும் என்பது இங்கு முக்கியமானதாக அமைகின்றது.

அனுசரிப்புகளும் விட்டுக் கொடுப்புகளும் இல்லாமையால், அழிவுகளும் இழப்புகளுமே மிஞ்சும் என்பதற்கு வரலாறுகள், பதிவுகள் பல இருந்தாலும் அதனை எவரும் பட்டறிவாக எடுத்துக் கெள்வதில்லை. அதனாலேயே தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் வீணாகப் போகிறது. 'ஏதோ காலத்தைக் கடத்திவிட்டு சென்றுவிடுவோம்' என்ற நிலைமையில் தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்பானது பல தலைமுறைகளைக் கடந்து விட்டது. 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை'யாக இருக்கக் கூடாது என்பதே, உலகளவிலுள்ள தமிழர்கள் அனைவருடைய எண்ணம்.

இந்த இடத்தில், கடந்த முறை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்புக்கு இணங்க இரா. சமம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமசந்திரன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் சென்றிருந்தனர். அதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பில், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பிரதிநிதியாக சுரேஸ் பிரேமசந்திரன் இருந்தார். ஆனால், இம்முறை கிடைத்த அழைப்பில் தமிழரசுக் கட்சியின் இருவர், மேலும் இரு சட்டத்தரணிகள் ஏன் பங்காளிக்கட்சிகளிலிருந்து ஒருவரையேனும் அழைத்துச் செல்ல முடியாது என்பதே இப்போதைய கேள்வியாகும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பது, தமிழரசுக்கட்சி மாத்திரம் உள்ள கட்சியல்ல. அது ஒரு கூட்டு; அதில் இப்போது அலுவலக ரீதியாக மூன்று கட்சிகளும், அலுவலகம் சாராமல் மேலும் சில கட்சிகளும் இருக்கின்றன. தனிப்பட்ட விடயங்களுக்காக ஒன்றை மேற்கொள்ளும் போது செயற்படுவதற்கும் ஒட்டுமொத்தமாக தமிழர்களின் அபிலாஷைகள் சார்ந்த விடயங்களுக்கான நகர்வுகளை எடுக்கும் போதும் நடந்து கொள்வதற்கான நடைமுறைகள் வேறு வேறு.

வெறுமனே வாக்கு வங்கியை சரிசெய்வதும் தக்கவைத்துக்கொள்வதும் அதனை பெருக்கிக் கொள்வதும் தமிழர்களின் அரசியல் பயணத்தில், இன்றைய காலத்தில் முக்கிமல்ல என்பதே இப்போதுள்ள விமர்சனமாகும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட வேளையில், இருந்த தமிழர்களின் ஆயுத அதிகாரம் 2009 மேயின் பின்னர் இல்லாமல் போனதன் பயனாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதிக்க சக்தியாக தன்னை வரித்துக் கொண்டிருக்கும் தமிழரசுக்கட்சி, ஏனைய கட்சிகளை வெளியேற்றிவிடும் கைங்கரியத்தைச் சாதுரியமாக நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த வலையில் சிக்கி வெளியேறிக் கொண்டவர்கள், வேறு வழிகளைத் தேடிக் கொண்டிருக்கையில் இப்போதும் தொடரும் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கப் போக்குக்கு யார் பலியாப் போகின்றார்கள் என்பதுதான் எதிர்பார்ப்பு.

தமிழர் அரசியலில், ஆரம்பகாலம் தொட்டு நடைபெற்று வருகின்ற இவ்வாறான குழி பறிப்புகள், அடாவடிகள், அதிகார செயற்பாடுகளால் ஆதிக்கப் போக்கு காரணமாக, எது உண்மையான தமிழ்த் தேசியம் என்ற சந்தேகம், இப்போது பலரிடம் ஏற்படத் தொடங்கிவிட்டது.

தமிழ்த் தேசிய பரப்பின் அலைமோதல் என்றே இதனைக் கூறிக் கொள்ள முடியும். எதையும் மென்மையாகவே செயற்படுத்த வேண்டும் என்கிறவர்கள் ஒருபுறமும் வன்முறையையும் வன்போக்கையும் தவிர வேறு வழியில்லை என்பவர்கள் மறுபுறமும் என்று முரண்பட்டு நிற்கின்ற நிலை, பேரினவாதிகளின் எதிர்பார்ப்பாகும். இதற்கு உரமிடுபவர்களாக நாம் மாறிவிடுவதில் பயனில்லை. ஜனாதிபதி கோட்டாபயவின் நியூயோர்க் உரையும் அழைப்பும், வெளிநாட்டமைச்சரின் செயற்பாடுகளும் முன்னெடுப்புகளும் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், தமிழர் தரப்பின் நகர்வுகள் இவ்வாறு அலைமோதுவதால் என்ன பயன் கிட்டும் என்பதே, தமிழர் முன் உள்ள இலக்கு.

இந்த இலக்கை அடைவதில் தமிழ்த் தேசிய அரசியல் தமிழ் பேசும் தரப்பினையும் இணைத்துக்கொண்டு நிதானமாக மிக மிகப் பெறுமானத்துடன் பயணிக்க வேண்டும்.



சமூக இடைவெளி பேணுவோம்

# கொரோனாவிலும் 'எயிட்ஸ்'

இரத்தினம்
நடராஜன்

என்னடா இது கொரோனாவில் தொடங்கி எயிட்ஸ் பற்றி சொல்கின்றார்கள் என்று நினைக்கின்றீர்களா? உண்மையில் சுத்தம் சுகாதாரமாக இருந்தால் எந்த நோயும் அண்டாது. கொரோனா - எயிட்ஸ் இரண்டும் பாதிக்கப்பட்ட நபரில் இருந்து பாதுகாப்பின்றி பழகும் மற்றையவருக்கும் பரவும் ஒரு சமூக கொத்தனியாகும்.

இதனை ஆரம்பத்தில் தடுப்பதன் மூலம் நாம் சார்ந்த சமூகத்தினை ஆரோக்கியமானதாக பேணலாம்.

கொவிட்-19 தொற்று தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்திவரும் ஒரு சூழ்நிலையிலும், எயிட்ஸ் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2020 ஆம் ஆண்டு எயிட்ஸ் தினத்தில் கருத்து தெரிவித்திருந்தார்.

1987ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பில் எயிட்ஸ் தொடர்பான உலகளாவிய நிகழ்ச்சியின் பொது தகவல் அதிகாரிகளான ஜேம்ஸ் பன்ஸ் மற்றும் தாமஸ் நெட்டேர் ஆகியவருக்கு தோன்றிய யோசனைக்கு அமைய சர்வதேச எயிட்ஸ் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதற்கமைய 1988ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசெம்பர் முதலாம் திகதி கடைப்பிடிக்கப்படும் சர்வதேச எயிட்ஸ் தினம், எச்.ஐ.வி தொற்று பரவலால் ஏற்படும் எயிட்ஸ் தொற்றுநோய் தொடர்பில் விழிப்பூட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் சுகாதார அதிகாரிகளினால் எயிட்ஸ் தொடர்பான எண்ணக்கருக்களில் பேச்சுக்கள், மாநாடுகள், பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இலங்கையில் இத்தினம் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது.

உலகளாவிய ரீதியில் எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவரை 37 மில்லியனை தாண்டியுள்ளது. ஆண்டுக்கு 1.7 மில்லியன் பேர் புதிதாக எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாவதுடன், இலங்கையில் அது ஒரு சதவீதத்திற்கும் குறைவாகும்.

எது எவ்வாறாயினும் எயிட்ஸுக்கு எதிராக போராடுவதற்கும், தடுப்பதற்கும் நாம் உறுதியாக இருக்க வேண்டியதுடன், அது தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். எச்.ஐ.வி தொற்றுடைய நபர்கள் சமூகத்தினால் ஒதுக்கப்படாதிருப்பதற்கும், அவர்களை தேவையான சிகிச்சைக்கு உட்படுமாறும் நாம் அறிவிக்க வேண்டும்.

உலகில் வாழ்கின்ற மனிதர்களில் பெரும்பாலானோர் இன்பங்களைச் சுகிப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். அதிலும், சிற்றின்பத்தை (உடலுறவு) அனுபவிப்பதில் மிகவும் நாட்டம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

ஒருவரின் உடலுக்குள் எச்.ஐ.வி கிருமி தொற்றி, நீண்டகாலம் வாழும்போது, அவரின் உடல் நோய் எதிர்ப்பு சக்தியை படிப்படியாக இழக்கும் போதுதான், அவருக்கு எயிட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளது என்பது கண்டறியப்படுகின்றது.

இந்த வைரஸானது, ஓர் உயிருள்ள கலத்தைத் தெரிவுசெய்து, அதில் பல்கிப் பெருகி, அக்கலத்தை முழுமையாக அழிக்கும் தொழிற்பாட்டைச் செய்கின்றது; அல்லது, அக்கலத்தின் செயற்பாட்டை இல்லாமல் செய்து விடுகின்றது. பொதுவாக, மனித உடலில் காணப்படுகின்ற நிணநிர்ப்பீடனத் தொகுதியிலுள்ள 'ரீ- ஹெல்பர்' கலங்களையே தாக்கியழித்து, அக்கலத்திலிருந்து வெளியேறுகின்றது.

வீரியத்துடன் வெளியேறும் வைரஸுகள் அழிந்துபோவதில்லை; மாறாக வேறு கலங்களுக்குள் புகுந்து அவற்றையும் தாக்கி அழித்து, அதனுடைய செயற்றிறனையும் அற்றுப்போகச் செய்து பல்கிப் பெருகுகின்றன.

அதனால், எச்.ஐ.வி தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்கள், அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் போன்ற முக்கிய விடயங்கள் குறித்து அறிந்துக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

## எயிட்ஸின் வரலாறு

அமெரிக்காவில் 1981ஆம் ஆண்டு ஜூன் ஐந்தாம் திகதி நோய்க்கட்டுப்பாடு தடுப்பு நிலையம் (சி.டி.சி) ஆண் ஓரினச்சேர்க்கையாளர் ஐந்து பேரிடம் ஓர் அரியவகை நிமோனியாக் காய்ச்சலைக் கண்டறிந்து, ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. இந்த அறிக்கைதான் முதலாவது எயிட்ஸ் நோய் பற்றிய ஆவணமாகும்.

எயிட்ஸ் நோய், 1981ஆம் ஆண்டில் அறியப்பட்ட போதிலும் 1983 ஆம் ஆண்டில்த்தான் எச்.ஐ.வி இனங்காணப்பட்டது. அதாவது, பிரான்ஸ் நாட்டில் அமைந்துள்ள பாஸ்டர் விஞ்ஞானக் கூடத்தில் வைத்து, பிரான்ஸ் விஞ்ஞானியான லூக் மொண்டிக்கயர் என்பவரால் இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

அப்போது 'எல்.ஏ.வி' என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டது. பின்னர், 1984ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள 'தேசிய புற்றுநோய் நிறுவனம்' எயிட்ஸ் நோயை, வைரஸ் கிருமிதான் உருவாக்கின்றது என்பதை உறுதிப்படுத்தியது. அதன் பின்னர்தான், 'எச்.ஐ.வி' எனப் பெயரிடப்பட்டது. 1986 ஆம் ஆண்டுதான் எச்.ஐ.வி உறுதிப்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எயிட்ஸ் நோய் பரவும் முறைகள்

1. பாதுகாப்பற்ற பாலியல் உறவு
2. எச்.ஐ.வி தொற்றுடைய இரத்த மாற்றீடு; அல்லது, தொற்றுடைய ஊசி, கூர்மையான பொருட்கள்
3. எச்.ஐ.வி தொற்றுடைய தாயொருவருக்குப் பிறக்கும் குழந்தை; அல்லது, தொற்றுடைய தாய் பாலூட்டல்

## பாதுகாப்பற்ற பாலியல் உறவு

எயிட்ஸ் தொற்றுவதற்கு பிரதான காரணியாக உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது பாதுகாப்பற்ற உடலுறவாகும். எச்.ஐ.வி தொற்று இல்லாத இருவர் உடலுறவு கொள்வதால் எந்தப் பாதிப்பும் இல்லை.

## ஊசிகள்

எச்.ஐ.வி தொற்றுள்ள ஒருவருக்கு ஏற்றப்பட்ட ஊசியை, சுத்தம் செய்யாமல் மற்றவருக்கு செலுத்துவதால் எச்.ஐ.வி பரவக்கூடும். எச்.ஐ.வி தொற்றுள்ள ஒருவரிடமிருந்து பெறப்பட்ட இரத்தத்தை இன்னொருவருக்கு செலுத்தும்போதும் தொற்று ஏற்படக்கூடும். சில இளைஞர்கள் மத்தியில் போதை ஊசிகள் ஏற்றும் பழக்கமும் இருக்கின்றன இதுவும் இந்த நோய் தொற்றிக்கொள்ள ஏதுவாக அமைவதுடன், பச்சை குற்றுதல், முகச்சவரம் செய்யும் முறையிலும் தொற்றலாம்.



Anatomy of the AIDS Virus

## எயிட்ஸ் அறிகுறிகள்

இருவகையான இரத்த பரிசோதனையின் மூலம் நோயை இனங்காணலாம். முதலாவது இரத்தப் பரிசோதனை 'எலைசா' சோதனையாகும்.

இரண்டாவது இரத்தச்சோதனை 'வெஸ்டர்ன் புளொட்' சோதனையாகும். இந்தச் சோதனைதான் எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் சோதனையாகும்.

அதாவது 'எலைசா' சோதனையில் நேர் வகையைக் காட்டும் ஒவ்வோர் இரத்த மாதிரியும் 'வெஸ்டர்ன் புலொட்' சோதனைக்கு உட்படுத்தப்படும். இந்தச் சோதனையில் எச்.ஐ.வி தொற்று காணப்பட்டால் மாத்திரமே பரிசோதனையில் பெறுபேறு கிடைக்கப்பெறும்.

## எச்.ஐ.வி பரிசோதனை யார் மேற்கொள்ள வேண்டும்?

1. தமது பாலியல் உறவு தொடர்பில் சந்தேகம் ஏற்படும் ஒருவர், பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.
2. எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளதாக வைத்தியர் சந்தேகிக்கும் நபர்.
3. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறச் செல்வதற்கு முன் தேவையாகக் கருதப்படும் சந்தர்ப்பத்தில், இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.
4. சுயவிருப்பின் பேரில் ஒருவர் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளலாம்
5. சுய பரிசோதனை கிட் மூலமும் இதனை செய்து கொள்ள முடியும்

## எயிட்ஸ் மருந்துகள்

எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டு, எயிட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்படும் சிகிச்சையின் மூலம் அந்நோயைப் பூரணமாகக் குணப்படுத்த முடியாது. அதற்கான மருத்துவ முறைகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால், எச்.ஐ.வி உடலுக்குள் பரவும் வேகத்தைக் குறைக்கக் கூடிய மருந்துகள் காணப்படுகின்றன. அதாவது 'அன்டி ரெட்ரோ வைரஸ் மருந்துகள்' இரத்தத்தில் கலந்துள்ள வைரஸின் எண்ணிக்கையை குறைப்பதுடன் அவை பரவுவதையும் கட்டுப்படுத்துகின்றன.

## எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டங்கள்

எச்.ஐ.வி பரவுவதைத் தடுத்து, உயிர்குடிக்கும் எயிட்ஸ் நோயிலிருந்து, தமது மக்களையும் நாட்டையும் பாதுகாத்துக்கொள்ள, பெரும்பாலான நாடுகள் பெரும்தொகைப் பணத்தைச் செலவிட்டு, பலவிதமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

## இலங்கையில் எயிட்ஸ்

இலங்கையில் 1987ஆம் ஆண்டிலேயே எயிட்ஸ் நோயாளர்கள் இனங்காணப்பட்டு விட்டனர் என்பது வேதனை தரக்கூடிய விடயமாகும். பின்னர், நோயாளர்களின் தொகை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதாக 'பாலியல் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்' அறிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டம் எயிட்ஸ் நோயாளர் தொகையில் முதலிடத்தில் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 840 பேர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

விலைமதிக்க முடியாத உயிருக்கு, வேட்டு வைக்கும் நோய் தான் உலகமே கொரோனா என்று சொல்கின்றது அதிலும் எப்படி 'எயிட்ஸ்' என்று அடையாளப்படுத்தியுள்ளது. 'எயிட்ஸ்' நோய், 'எச்.ஐ.வி' வைரஸ் எனப்படும் ஒருவகை கொடியதும் இலகுவில் தொற்றக்கூடியதுமான வைரஸ் கிருமியினால் ஏற்படுகின்றது.

எது எவ்வாறெனினும் நம்மை நாம் பாதுகாத்து நோயின்றி வாழ்த்தாலே நமக்கும் நம்மை சார்ந்த சமூகத்துக்கும் சிறப்பாகும் .

விழிப்புடன் தனித்து இருப்போம்; உயிரைக் காப்போம்.

# வாழ்தலில் ஆணேது பெண்ணேது

இ.ஷயனுதா
sona07.r@gmail.com
ஊடகக் கற்கைகள் துறை (4ம் வருடம்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

விதிமுறைகளையும் வரன்முறைகளையும் விதிப்பதில் சமூகம் என்றுமே முதல் இடத்தில் தான் இருக்கின்றது. அத்திவாரம் பலமாக இருந்தால் தானே கட்டடம் கட்ட முடியும். அது போல தான் இன்றைய காலகட்ட கருத்தாடல்களின் அடித்தளம் சமுதாயத்தினால் அசைக்க முடியாத அளவிற்குப் போடப்பட்டுள்ளது. பல்வேறு விடயங்களில் இது தான் சரி; இது பிழையென சமுதாயம் ஒரு கட்டுப்பாட்டினை சில சமயங்களில் திணிக்கத்தான் செய்கிறது.

சமுதாயம் போட்ட வரைமுறைகளில் முக்கியமான ஒன்று தான் பால் மற்றும் பால்நிலை பற்றிய கருத்துக்கள். இன்று பால்சார் விடயங்களில் நிலவும் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் நம்மிடையே வேரூன்றி இருக்க காரணம் சமுதாயத்தின் அத்திவாரத்தில் அது பற்றிய தவறான புரிந்துணர்வு விதைக்கப்பட்டுள்ளது. ஆண்-பெண் என்றால் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்றும் ஆணிற்குரிய குணாதிசயங்கள் இவை தான்; பெண்ணிற்குரிய குணாதிசயங்கள் இவைதான் என்றும் ஒரு போர்வை ஆரம்பத்திலேயே போர்க்கப்பட்டுள்ளது.

பால் மற்றும் பால்நிலை தொடர்பான முழுமையான விளக்கத்தினை எம்முடைய முன்னோர் சமுதாயம் பெற்றிருக்கவில்லை. பால் என்பது இயற்கையாக பிறப்பில் தோற்றுவிக்கப்படுகின்றது. அது உடலியல் மற்றும் உயிரியல் சார் விடயமாக அமைகின்றது. இந்த பால் என்னும் விடயம் தான் சமூகமயமாக்கல் செயற்பாட்டின் மூலம் பால்நிலையாக வரையறுக்கப்படுகின்றது. பால் என்னும் எண்ணக்கருவினை எம்மால் மாற்ற முடியாது. ஆனால் பால்நிலை மாறும் தன்மை கொண்டது. ஆண் பெண்ணிற்கு என தனித் தனியான குணவியல்புகளை வரையறுப்பதில் தொடங்குகின்றது பால்நிலை.

ஆண்- பெண் என்கின்ற பால் வேறுபாட்டினை சமூகமானது பால்நிலையாகக் கட்டமைத்து அதற்கென தனியாக விதிமுறைகளையும் வகுத்ததன் விளைவே பெண்களை இரண்டாம் நிலையாகக் காண்பிக்கின்றது. பெண்களின் உடலியல் வேறுபாடு காரணமாக அவர்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவதோடு பாலினப் பாகுபாடு சுரண்டல் சமத்துவமின்மை போன்ற பிரச்சினைகள் உருவெடுக்கின்றன.

ஆண்- பெண் என்ற இரு தரப்பினரையும் பற்றி பேசப்படும் அளவிற்கு தன் பால் ஈர்ப்பினர்களை பற்றியோ மாற்றப் பாலினத்தவர்களைப் பற்றியோ பேசுவதென்பது மிகவும் குறைவாகும். அதையும் மீறிப் பேசினால் அவர்களை இழிவுபடுத்தும் வகையில் பேசுவதையே எம்முடைய சமுதாயம் வழக்கமாகக் கொண்டுள்ளது. ஒருவர் தன்பாலீர்ப்பினராக மாறுவதும் மாற்றுப் பாலினத்தவராக மாறுவதும் அவரவர் கையில் இல்லை. அது இயற்கையாக இடம்பெறும் உயிரியல் மற்றும் உடலியல் மாற்றமாகும். இதனை முதலில் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இந்த மாற்றம் காரணமாக அவர்களை சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைப்பது மற்றும் ஏளனம் செய்வதென்பது எந்த விதத்தில் நியாயமானது?

மாற்றுப் பாலினத்தவர்களுக்கும் சரி தன் பாலீர்ப்பினர்களுக்கும் பட்டப் பெயர்களைச் சூட்டுவதும் அப் பெயர்களைக் கொண்டு அவர்களை கிண்டல் செய்வதும் எம் சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மிகவும் வெட்கத்திற்குரிய செயற்பாடாகும். விதை விதைத்தவர்கள் முன்னைய காலத்தினை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அதனை உரம் போட்டு வளர்ப்பவர்கள் தற்காலத்தினர் தான். பொதுவாக இன்றைய கால இளைஞர்களினுடைய சிந்தனை ஆற்றல், அறிவு மற்றும் ஒரு விடயத்தை எவ்வாறு பகுத்தறிகின்றார்கள் என்பன போன்ற விடயங்களில் திறம்பட செயற்படுகின்றனர் என்ற ஒரு தன்மை காணப்படுகின்றது. ஆனால், அதனை அவர்கள் எல்லா விடயங்களிலும் பிரயோகிக்கின்றார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

அதிலும் முக்கியமாக சமூக வலைத்தளங்களில் தம் கை போன போக்கிற்கு எழுதும் திறமை இக்கால இளைஞர்களை விட வேறு யாருக்கு உள்ளது? சில பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதிலும் ஓர் ஒற்றுமைத் தன்மையான எழுத்துப் போராட்டத்திற்கும் இந்தத் திறமை தேவை தான். ஆனால், அதனையே ஒருவரின் உணர்ச்சிகளையும் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையையும் விமர்சிப்பதற்கும் அதில் அவர்களினுடைய திறமையினைக் காண்பிக்கவும் இந்தச் சமூக வலைத்தள போராளிகளிற்கு யார் உரிமை கொடுத்தது? அந்த உரிமையை அவர்களாகவே எடுத்துக் கொள்ளும் துணிச்சல் எங்கிருந்து வந்தது?

ஒரு பெண் தன் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏதும் தவறு இழைத்திருந்தாலோ அல்லது அவளது வாழ்வில் ஏதேனும் எதிர் மறையான விடயங்கள் நடந்திருந்தாலோ அதனை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் முகப்புத்தகப் போராளிகளிற்கு அளவற்ற ஆனந்தம் கிடைக்கின்றது. பெண்களைப் பற்றி இழிவாகவும் தரமற்ற வார்த்தைகளையும் கூறிச் சாடும் அவர்களிற்கு குறித்த பெண்ணின் நிலைக்குக் காரணமான ஆண் கண்ணுக்குத் தெரிவதில்லை. அவனைப் பற்றிய பேச்சு எடுப்பதும் இல்லை. கேட்டால் பெண் என்றால் அதற்கேற்றாற் போல் இருக்க வேண்டும்; இல்லையென்றால் இப்படித்தான் அசிங்கப்பட நேரிடும் என்பார்கள். அப்படியெனில் ஆண்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எந்த ஒரு நியதியும் இல்லையா? ஏன் கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் தான் இருக்கின்றதா? ஆண்களிற்கு அது இல்லையா?



பிறரினுடைய உணர்வுகளிற்கு மதிப்பளிக்கத் தெரியாதவர்கள் உயிரற்ற உடம்பிற்குச் சமமானவர்கள். திருநங்கைகள், திருநம்பிகளை சக மனிதராக மதிக்கும் எத்தனை பேர் இருக்கின்றார்கள். அவர்களை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் ஜந்துகள் இங்கு ஏராளம். பாலியல் தொழில் செய்வதற்கும் பிச்சை எடுப்பதற்கும் தான் அவர்கள் பொருத்தமானவர்கள் என அடிமட்டமாகச் சிந்திக்கும் அறிவாற்றலைப் பெற்றவர்கள் அனேகர் உள்ளனர். அது மட்டும் இல்லாமல் திருநங்கைகளிற்கு எத்தனை பெயர்களைச் சூட்டுவார்கள். சிலரைக் கேட்டால் அவர்களை என்ன பால் எனக் கருதுவது? அவன் என்ற பதத்தினை பாவிப்பதா; இல்லை, அவள் என்ற பதத்தினை பாவிப்பதா என புரியவில்லை என்கிறார்கள். உடலியல், உயிரியல் ரீதியில் தன்னை பெண்ணாக உணர்ந்தவர் தானே, அவர்கள் அவ்வாறிருக்க அவர்களை பெண்ணாகத் தானே பார்க்க வேண்டும். இதில் என்ன சந்தேகம் என்று புரியவில்லை.

திருநங்கைகள், திருநம்பிகளை எவ்வாறு நடத்துகின்றனரோ அதே போல தான் தன்பாலீர்ப்பினரையும் நடத்துகின்றனர். யாருடைய உடலில் எப்போது எவ்வாறான உயிரியல் மாற்றம் ஏற்படும் என்று கூற முடியாது. இரு ஆண்கள் ஒருவர் மீது ஒருவர் அளவற்ற அன்பைக் காட்டுவதும் இரு பெண்கள் ஒருவர் மீது ஒருவர் அளவற்ற அன்பைக் காட்டுவதும் தவறொன்றும் இல்லையே! அதுவும் காதல் தானே! ஆண், பெண்ணிற்கு இடையில் வருவது மட்டும் தான் காதல் என்று உலகில் எந்த நியதியும் இல்லையே?



பல சமயங்களில் இவ்வாறான நிலையை எதிர்கொள்பவர்களை வீட்டில் ஏற்றுக் கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியில் துரத்துவது, உதாசீனம் செய்வது போன்ற சம்பவங்கள் இடம்பெறும். ஆனால் சில சமயங்களில் வீட்டில் ஏற்றுக் கொண்டால் எம் சமுதாயம் மிகவும் மோசமாக அவர்களை நடத்தும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இதற்கு நல்ல உதாரணம் அண்மையில் இடம்பெற்ற ஒரு திருமணம். கனடா நாட்டில் இரு பெண்கள் திருமண பந்தத்தில் இணைந்தார்கள். ஆம் அவர்கள் தன்பாலீர்ப்பினர்கள் தான். அவர்களைப் புரிந்து கொண்ட அவர்களது பெற்றோர் முழு மனதோடு அவர்களிற்கான வாழ்க்கையை வழங்கிய போது, சமூக வலைத்தளவாசிகளினுடைய கேவலமான மனநிலையை அறிய முடிந்தது.

இவ்வாறான நிகழ்வுகளால் தம்முடைய மதத்திற்கு இழுக்கு என்று மதவாதம் பேச ஆரம்பித்து என்ன பேச்செல்லாமோ பேசித் தீர்த்தார்கள். இவ்வாறான சிந்தனையுள்ளவர்களை வைத்திருப்பதால் தான் ஒவ்வொரு மதமும் அழுக்கடைகின்றது. முதலில் இவ்வாறான விடயங்களில் மதம் பற்றிப் பேச என்ன அவசியம் இருக்கின்றது? இது மனங்கள் சம்மந்தப்பட்ட விடயம். அதில் மதத்திற்கோ மொழிக்கோ இடமில்லை.

மதத்தினை காரணமாக வைத்து மாற்றுப்பாலினத்தவரையும் தன்பாலீர்ப்பினரையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறுபவர்கள் எதற்காக அர்த்தநாரீஸ்வரரை வழிபடுகின்றனர். சிவனும் பார்வதியும் இணைந்த தெய்வம் தானே! அது ஆண் தெய்வமா இல்லை பெண் தெய்வமா? அதனை ஏற்றுக் கொண்ட மக்களுக்கு தம் சக மனிதரை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் ஏன் வரவில்லை. இது இந்துக் கடவுளை சொல்லுவதாகவோ அல்லது இந்துக்களை மட்டும் சாடுவதாகவோ இல்லை. அனைத்து மதத்தவர்களிற்கும் இது பொருந்தும். மதக் கொள்கைகளை கடவுள் எப்போதும் விதித்தது இல்லை. எம்மில் உள்ள அறியாமையின் விளைவு தான் நாம் உருவாக்கிய மதம் சார் கருத்துக்கள்.

பால் எதுவாயினும் எல்லோரும் மனிதர்கள் தானே. காலம் எவ்வளவு மாறிப்போனாலும் உலகம் என்ன தான் வளர்ச்சியை அடைந்தாலும் பல மனித மனங்கள் மட்டும் மாற்றத்தினை ஏற்க மறுக்கும் தன்மை கொஞ்சம் பிற்போக்கான நிலை என்றுதான் கூற வேண்டும். அதை அவ்வளவு எளிதாக மாற்றிவிடவும் முடியாது. ஆனால் மாற்றத்திற்கான முயற்சிகள் எடுக்கப்படாமல் இருப்பது தான் தவறு. ஆணோ பெண்ணோ திருநங்கையோ திருநம்பியோ அது என்ன பாலாக என்றாலும் இருக்கட்டும். அவர்கள் வாழ்வதற்கான உரிமையை பறிக்கும் எண்ணம் அழிய வேண்டும். அவர்களின் உரிமை அவர்களுக்கானது. அதில் தடைக்கற்களைப் போட வேண்டாமே!!!

# நீளும் பட்டியல்

## மலையக மக்களும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளும்

ச.மங்களதர்ஷினி
sarandharshi2106@gmail.com











கடந்த இரு ஆண்டுகளாக கொரோனா எனும் கொடிய வைரஸ் தாக்கத்தினால் முழு உலகத்திலும் பலக் கோடி மக்கள் பாதிப்படைந்துள்ளனர். இத்தீவிர நோய்த் தொற்று உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஏழை எளியவர், இளையோர் முதியோர் என ஆண்டான் முதல் அடிமை வரை அனைவரையும் நிலைகுலையச் செய்துள்ளது. 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் சீனாவின் வூஹான் மாநிலத்தில் உருவான இவ்வைரஸ் பரவலானது இன்றளவிலும் பல நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

சாதாரண வாழ்க்கை நடைமுறை தொடக்கம் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம், கல்வி நடவடிக்கைகள், தொழில் முயற்சிகள், கைத்தொழில் நடவடிக்கைகள், அபிவிருத்திச் செயற்பாடுகள், பாதுகாப்பு, சுகாதாரம், அரசியல், விளையாட்டு என சகலத் துறைகளினதும் செயற்பாடுகளையும் ஸ்தம்பிதம் அடையச் செய்கின்ற தொற்று நிலையாக கொவிட்19 வைரஸ் பரவலை பல அறிஞர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர்

நாம் அனைவரும் நம்மை வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அலுவலக வேலைகள் இன்று வீட்டில் இருந்தே முன்னெடுக்கப்படுகின்றன. அடிப்படை கல்வி இணையமயப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாள்களையும் ஒவ்வொரு யுகமாய் நாம் கழித்துக் கொண்டிருக்கிறோம்

பல்வேறு நாடுகளில் மட்டுமல்லாது எமது நாட்டிலும் கூட சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அனைத்து கருமங்களையும் ஆற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் இலங்கையின் அதிக வருவாயை ஈட்டி தருகின்ற பெருந்தோட்டத்துறையில் கொரோனா தடுப்பு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படும் விதம் தொடர்பில் பல கேள்விகள் நிலவுகின்றன

இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில், கொரோனா நோய்த்தொற்று காரணமாக கடந்த ஆண்டில் நாடளாவிய ரீதியிலான நடமாடுவதற்கான தடை உத்தரவினை விதித்திருந்தது, போக்குவரத்து தடைப்பட்டது, பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மீள் அறிவித்தல் வரை மூடப்பட்டன, அலுவலக வேலைகள் அனைத்தும் இல்லங்களிலிருந்து இயங்கின. ஆனாலும் கூட தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மட்டும் வேலை களங்களுக்குச் சென்று தமது தொழிலை ஆற்றினர்.

கொட்டும் மழையிலும் கொளுத்தும் வெயிலிலும் உறையும் பனியிலும் மலைகளில் கொழுந்து பறித்து ஜீவனோபாயத்தை பெற்றுக்கொண்டோர், தங்களை இத்தகைய அனர்த்த சூழலிலும் பணியாற்ற பழக்கிக் கொண்டனர். நோய் தொற்றிலிருந்து தனிநபர் ஒருவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பல செயற்பாடுகளை உலக சுகாதார ஸ்தாபனம் கடைப்பிடிக்குமாறு பணித்துள்ளது. அதனடிப்படையில் 20 செக்கன்களுக்கு குறையாமல் சவர்க்காரம் இட்டு கைகளை அடிக்கடி கழுவுதல், ஒரு மீற்றர் எனும் சமூக இடைவெளியை பேணுதல், முகக்கவசம் அணிதல், அல்ககோல் மூலம் தயாரிக்கப்பட்ட கைகளை கழுவும் திரவத்தை அடிக்கடி பயன்படுத்துதல், கண், மூக்கு, வாய் என்பவற்றை அடிக்கடி தொடாமலிருத்தல் என்பன முக்கியமான அம்சங்களாக கருதப்படுகின்றன.

ஆனால், இவ்வாறான அடிப்படையான செயற்பாடுகள் அனைத்தையும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் சரியாகப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன. தொழிலை வழங்கும் நிறுவனங்களின் முக்கிய பொறுப்பு கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் ஆகும். விதிவிலக்காக ஏதேனுமோர் ஓரிரு தேயிலைத் தோட்டங்களில் ஆவது தொழிலாளர்களுக்கு அடிக்கடி கை கழுவுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. காலையில் வீட்டில் இருந்து செல்லும் தொழிலாளர்கள் உணவு இடைவேளைக்கு செல்லும்போதே கைகளை வெறும் நீரினால் கழுவிக் கொள்கின்றனர். இடையில் எச்சந்தர்ப்பத்திலும் தமது கைகளை சவர்க்காரம் இட்டு கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

அறுபது சதவீதம் அல்ககோல் நிறைந்த கைகழுவும் திரவத்தினை மலையக தோட்டத் தொழிலாளர்கள் பயன்படுத்துவதே இல்லை. காரணம், அதன் விலை அதிகரிப்பும் போதாமையுமே ஆகும். இங்கு போதாமை எனப்படுவது, சக தொழிலாளர்கள் தமது குளிரைக் கட்டுப்படுத்திக்கொள்ள வெற்றிலை, புகையிலை கடன் வாங்குவதைப் போல ஒரு சிலர் பயன்படுத்துகின்ற கை கழுவும் திரவத்தை கூட, கடனாகப் பெற்றுக் கொள்கின்றமை ஆகும். 250 ரூபாய் செலவழித்து, பெற்றுக்கொள்ளக்கூடிய கை கழுவும் திரவத்தினை ஒரு வாரத்திற்கு கூட பயன்படுத்த முடியாமல் இருப்பதால், சில காலங்கள் அதனை பயன்படுத்திய மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் அதனை கைவிட்டுள்ளனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே தாம் இன்றும் தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர் .

அடுத்தப்படியான பிரச்சினை முகக்கவசம் ஆகும். சுகாதாரப் பிரிவினர் கொவிட் 19 தற்பாதுகாப்பு முகக்கவசங்களாக அங்கிகரித்த 19 விதமான முகக் கவசங்களில் இரட்டை முகக் கவசங்கள், KN 95 முகக் கவசங்கள், மீண்டும் பயன்படுத்தக்கூடிய முகக் கவசங்கள், சத்திரசிகிச்சை முகக் கவசங்கள், அமெரிக்கா தயாரிக்கின்ற முகக் கவசங்கள் இவ்வாறு பல காணப்படுகின்ற போதிலும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் பயன்படுத்துவது தையல்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய துணியால் தைக்கப்பட்ட முகக்கவசங்களையே!

அன்றாடம் புதுப்புது முகக்கவசங்களை வாங்கி பயன்படுத்துவதற்கு மாத வருமானத்தில் ஒரு தொகை பணம் செலவாவதால் துணியாலான முகக்கவசங்களை அவர்கள் அணிந்து கொள்கின்றனர. குறைந்த தொகையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றமை, அடிக்கடி சுத்தம் செய்து பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பனவே இவர்கள் துணியாலான முகக்கவசத்தை பயன்படுத்துவதற்கான முக்கிய காரணங்களாகும்.

கொவிட் 19 நோய் பரவலில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குறைந்தபட்சம் ஒரு மீற்றர் எனும் சமூக இடைவெளியை இன்னும் கடைபிடிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கிய தொடர்புகள் உடனேயே பணியாற்றுகின்றனர். மாதாந்த சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளும் போதும் அன்றைய நாளுக்கான தேயிலை நிறையை அளவிடும் போதும் மிக நெருக்கமான தொடர்புகளை ஒருவருக்கொருவர் கொள்கின்றனர். இந்நிலையில் ஒரு மீற்றர் எனும் சமூக இடைவெளியை கடைபிடிப்பது என்பது கேள்விக்குறியான ஒரு விடயமாகும்.

இவ்வாறாக பல சந்தர்ப்பங்களில், மலையக தோட்டத் தொழிலாளர்கள் கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டு அன்றாடம் தொழில் ஆற்றுகின்றனர். இதற்கான ஒட்டுமொத்த பொறுப்புகளையும் யார் பொறுப்பேற்பது என்பது தொடர்பில் கேள்விகள் உள்ளன. அந்த வகையில், தொழிலை வழங்குகின்ற முதலாளிகளின் அசமந்த போக்கா? அல்லது தங்களை தற்பாதுகாத்துக் கொள்ளத் தவறிய தொழிலாளர்களின் இயலாமையா? அல்லது, இதுதான் இவர்களின் விதியா? யாரை இங்கு குறை கூறுவது? மலையக மக்களின் வீட்டு வசதியின்மை, சொந்த காணி இன்மை, சம்பளப்பிரச்சினை, கல்வியை பெற்றுக்கொள்வதில் உள்ள குறைபாடுகள் என இன்னும் பதில் கிடைக்கப் பெறாத கேள்விகளின் பட்டியலில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளும் தற்போது இணைந்து கொண்டுள்ளது.

# நவீன நாகரிகத்தின் சுவாசத்தைக் கூட உணராத 'அவுக்கனை அலிவங்குவ' மக்கள்

எம்.ஜே. பிஸ்ரின் முஹம்மத்





அநுராதபுரம் மாவட்டத்தின் கலாவெள தேர்தல் தொகுதியில் அமையப் பெற்றுள்ள கல்நேவ பிரதேச சபைக்கு உட்பட்ட அலிவங்குவ (யானைச்சந்தி) பெயரைப் போலவே நான்கு பக்கமும் வனத்தால் சூழப்பட்ட இடம். காடுகளுக்கு நடுவில் பயணிக்கும் ஒரு காபட் பாதை.

கிழிந்த ஆடைகளும் பரட்டை முடியுடனும் கூடிய சிறுமிகளும் சிறுவர்களும் தலையில் மண்குடங்களுடனும் கைகளில் ஏந்திச் செல்லும் வாளிகளில் இருந்து சொட்டும் தண்ணீர் துளிகளை அந்த காப்பட் வீதி உறிஞ்சி எடுத்துக் கொள்ளும் வேகமே அந்த பிரதேசத்தின் வெயிலின் கொடுமையை உணர்த்தி நிற்கிறது.

அந்த காபட் பாதையில் செருப்புகள் இல்லாத பிஞ்சுப் பாதங்களை பின் தொடரும் போது, அந்தக் காடுகளுக்கு நடுவில் ஆங்காங்கே ஓலையால் வேயப்பட்ட மண் வீடுகளும் ஓரிருகல் வீடுகளும் அந்தப் பிரதேசத்தின் வறுமையின் அடையாளங்களாகவுள்ளன.

அந்தக் காடுகளுக்கு நடுவில், நாகரிகத்தின் வாசத்தை கூட சுவாசிக்காத 48 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடியமர்ந்துள்ளனர். இவர்களில் 291 பேரில் 60 பேர் இந்தப் பிரதேசத்தில் வாக்குரிமை பெற்றவர்களாம்.

சுமார் 900 பேர்ச்சஸ் அளவிலான பிரதேசத்தில் வசிக்கும் இவர்களின் பிரதான தொழில்கள் யாசகம்பெறல், குரவர்களின் பாரம்பரிய தொழில்கள், புகைப்படங்களை பஸ்களில் விற்பனை செய்தல், பழைய போத்தல்கள் பிளாஸ்டிக்களைச் சேகரித்து விற்பனை செய்தல், தென்னைமரம் ஏறுதல் போன்ற நிரந்தரமற்ற தொழில்களையே செய்கின்றனர்.

பாரம்பரியமான சிங்கள மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தை கொண்ட அவர்கள், கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் பச்சைப் பப்பாளிக்காய்களை அவித்து உட்கொண்டுள்ளனர். இது அவர்களின் வறுமையின் அடையாளத்துக்கான இன்னுமோர் அத்தாட்சியாகும்.

இவர்களுக்கென்று அந்த ஊர் மக்களாலேயே அமைத்துக் கொள்ளப்பட்டுள்ள தேவாலயத்தில் காலத்துக்குகாலம் ஒன்று கூடி பூஜைகளையும் ஆவிகளை விரட்டும் நடனங்கள் (தொயில் ஆடுதல்) போன்ற சில விடயங்களை செய்கிறார்கள்.

1990 காலப் பகுதியில் அநுராதபுரம் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் வாழ்ந்த வீடற்றவர்களும் வழிப்போக்கர்களாகவும் குரவர்களாகவும் யாசகர்களாகவும் இருந்தக் குடும்பங்கள், காட்டுப் பகுதியை துப்புரவு செய்து அலிவங்குவ என்ற இந்தப்பகுதியில் குடியமர ஆரம்பித்ததாக, இந்தபிரதேச மக்களின் தலைவராகவும் இந்த பகுதியில் அமைந்துள்ள தேவாலயத்தின் குருவாகவும் பணிபுரியும் சுவர்ண ராக வில்லியா கேஷாந்தகுமார தெரிவித்தார்.

"நான் கொழும்பைச் சேர்ந்தவள். சிலாபத்தை சேர்ந்த ஒருவரை மணம் முடித்தேன். பின்னர் இருவரும் தொழில் தேடி கலாவெள மல்தெனிபுர, விஜித்தபுர பகுதியில் வந்து குடியேறினோம். அங்கு தற்காலிக வீட்டில் இருந்து கொண்டு கிடைத்த தொழிலை செய்தோம். காலவோட்டத்தில் அவர் விபத்தொன்றில் சிக்கி ஊனமுற்றார். பின்னர், கல்நேவ சந்தையில் யாசகம் எடுத்துக் கொண்டு, அந்த இடத்திலேயே வாழத் தொடங்கினோம். கணவர் இறந்த பின்னர், அப்போதைய பிரதேச சபை தலைவர் லிங் ஆரச்சிகேசு சிலாவத்தி தென்னகோனின் வழிகாட்டலில் இந்த இடத்தில் வந்து குடியேறினேன். இந்த இடத்தில் நிலையான வீடொன்றை உருவாக்கி குடியமர்ந்த முதல் பெண் நான்தான்.

இதற்கு பிற்பட்ட காலப்பகுதியில் வீடற்றவர்கள், ஆதிவாசி பரம்பரையினர், குரவர்கள், வழிப்போக்கர்கள், யாசகர்கள் என்று அலிவங்குவ பிரதேசத்தில் 48 குடும்பங்கள் குடியமர்ந்துள்ளனர்.

இவர்களில் 29 குடும்பங்களுக்கு அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானின் முயற்சியில் சுமார் தலா ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடுகளை சஜித் பிரேமதாஸ நிர்மாணித்து கொடுத்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்துக்குள் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மாத்திரமல்லாது வெளிமாவட்டங்களில் இருந்தும் திருமண நோக்கம், யாசகம் பெறல் போன்ற நோக்கங்களுக்காகவும் இந்த பகுதியில் வந்து குடியமர்ந்துள்ளனர்.

திருகோணமலை பகுதியில் இருந்துதொழில் நோக்கத்துக்காக வந்த போது அலிவங்குவ பிரதேச பெண் ஒருவரைக் காதல் திருமணம் செய்து கொண்ட மேடை நாடக ஆசிரியர் ஒருவர் தனது பெயரையோ புகைப்படத்தையோ ஊடகங்களுக்கு வெளிப்படுத்த விரும்பவில்லை.

"நான் சிங்கள உயர் சாதியை சேர்ந்தவன்.. இந்த இடத்தில் வாழ்பவர்கள் சமூகத்தால் தாழ் சாதியாக பார்க்கப்படுபவர்கள். எனவே, நான் இவ்வாறு இங்கு திருமணம் முடித்துள்ளதை வெளிப்படுத்தினால் எமது குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படும்" என்றார்.

அதேபோல் பாணந்துறையில் கரையோரகொட்டில் வீட்டில் வசித்து, சந்தையில் வியாபாரம் செய்துகொண்டிருந்த எஸ். ரன்ஜனி பீரிஸ் தனது மகளை இந்த பகுதியில் உள்ள நபர் ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார். பத்து வருடங்களுக்கு முன்னர் இங்கு வந்து குடியமர்ந்ததாகவும் அந்தப் பிரதேசத்தில் தற்போது வாக்குரிமை உள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

யாருக்கும் காணிக்கான உறுதிப் பத்திரமில்லை. சில மாதங்களுக்கு முன்னர் இந்த இடத்தில் வசிப்பவர்களுக்கான காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமே இவர்களிடம் உள்ளது.

38 வயதானகர் பணித் தாயான பெண், வெற்றிலையை மென்றவளாக பேச ஆரம்பித்தாள். "வயிற்றிலுள்ள பிள்ளையோடு எனக்கு ஆறு பிள்ளைகள். குடும்பக் கட்டுப்பாட்டுக்கான மருந்துகளை குடிக்கின்றோம். ஆனாலும் காலத்துக்கு காலம் குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் தானே" என்று சிரித்தவளாக பேச ஆரம்பித்தாள்.

"இந்த அலிவங்குவ பிரதேசத்தில் அதிகளவான சிறுவர் திருமணம் நடக்கிறது. 18 வயதுக்கு குறைவான திருமணம் முடித்தவர்கள் சுமார் ஆறு குடும்பத்தினர் இங்குள்ளனர். அதில் என்மகளும் ஒருத்தி. மகள் 16 வயதில் ஓடிச்சென்று திருமணம் முடித்தாள். இப்போது அவளுக்கு இரண்டு வயதில் குழந்தை இருக்கிறது. அவளுடைய கணவன் போதைக்கு அடிமையானவன். சில தினங்களுக்கு முன்னர் வந்து மனைவியையும் குழந்தையையும் தாக்கி விட்டு சென்றான். இவர்களில் பலருக்கு பதிவுத் திருமணமும் இல்லை. ஏனென்றால் அதற்கு அவர்களுக்கு வயது போதாது. எங்களுடைய சமூகத்தில் இந்தத் திருமண முறையும் போதைப் பொருள் பாவனையும் மிகப்பெரிய பிரச்சினைகளாகவுள்ளன. இங்குள்ள இளைஞர்கள் மதுபானம், கஞ்சா, குடு (தூள்) போன்றவைகளையும் அண்மைக்காலமாக ஒருவகை போதை மாத்திரையையும் பயன்படுத்துகின்றனர். தயவு செய்து ஐயா, இதனை எமது சமூகத்தில் இருந்து நிறுத்தி தாருங்கள்" என்று கைகூப்பினார்.

இது தொடர்பில், போதைப்பொருளுக்கு எதிராக தேசிய ரீதியில் பணிபுரிகின்ற 'எடிக்' நிறுவனத்தின் சிரேஷ்ட திட்டமிடல் அதிகாரி ஏ. சீரஹீமை தொடர்பு கொண்டுகேட்டபோது: "இப்படியான சிறிய சமூகக் குழுக்கள் மத்தியில், இவ்வாறான போதைப்பொருள் பிரச்சினை ஏற்படும் போது, முழுக் கிராமத்தையும் இணைத்து அதில் இருந்து மீட்கும் பணியை அந்த சமூகத்தில் சற்று அந்தஸ்து உள்ளவர்கள் ஊடாகவே முன்னெடுக்கவேண்டும். முதலில் இவர்களின் அடிமட்ட தரவுகளை திரட்டவேண்டும். பின்னர் இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள் என்று பிரித்து அவர்களோடு இணைந்த பணிகளை முன்னெடுக்க வேண்டும். அதேவேளை, இந்தக்குழுவில் உள்ள செல்வாக்கு மிக்கவர்களால் தற்போது முன்னெடுக்கப்படும் பணிகள் வெற்றியளிக்காமைக்கான காரணத்தை கண்டறிய வேண்டும். புனர்வாழ்வு நிலையங்களை போன்று இங்கு செயற்படமுடியாது. இந்த சிறிய சமூக பரப்போடு ஒன்றிணைந்தே இவர்களின் போதை பழக்கத்தை தடுக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்

அதேவேளை, இந்த சிறுவயது திருமணம் தொடர்பில் கல்நேவ பிரதேச செயலகத்தின் சிறுவர் நலன் அபிவிருத்தி அதிகாரி ஜே.எம். பீஉத்தேனி கூறும்போது, "எமது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களோடு ஒப்பிடும் போது, அலிவங்குவ பிரதேசத்தில் அதிகளவில் சட்டவிரோத சிறுவர் திருமணங்கள் இடம் பெறுகின்றன.இந்தச் சட்டவிரோத தொடர்புகள் சம்பந்தமாக ஏனைய அரச நிறுவனங்களோடு இணைந்து நாம் பல்வேறு பட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்.

எமது செயலகத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான தனியான ஒரு பிரிவுள்ளது. இவர்கள் பாரம்பரிய, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சமூகம் என்ற அடிப்படையில், அவர்களுக்கு இந்த விடயம் தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றோம். சிறுவர்களுக்கு இது குறித்து தெளிவுபடுத்துகின்றோம்" என்றார்.

எங்களோடு பேசிய இந்த பிரதேச வாசிகள் ஒன்றாக இணைந்து எம்மிடம் சில கோரிக்கைகளை முன்வைத்தார்கள். "எமது மருத்துவ தேவைகளுக்காக நாம் சுமார் ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கல்நேவ வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. குறைந்தது எமது பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மாதாந்த மருத்துவ பரிசோதனையை மட்டுமாவது ஏற்பாடு செய்து தாருங்கள். அதேபோல இந்தப் பிரதான பாதை பௌத்த முக்கியத்துவம் வாய்ந்த, சுற்றுலாப் பிரிவாகவும் உள்ள அவுக்கன விகாரையையும் ரெஸ்வெஹர விகாரையையும் இணைக்கின்ற இடமாகும். இந்தக் குடியிருப்பு பகுதிக்கு முன்னால் அமைந்துள்ள சீரம்பேவ என்ற பழைய குளத்தை புனர்நிர்மாணம் செய்தால் இந்த இடமும் முக்கியமான சுற்றுலாத் தளமாகவும் மாறும். அதேவேளை இந்தக் குளத்தை அண்டிய பகுதியில் எமக்கு விவசாயம் செய்ய கொஞ்சம் விவசாய நிலத்தை தந்தால் யாசகம் கேட்பது, போத்தல் சேகரிக்கும் தொழில்களை விட்டு விவசாயிகளாகவும் எம்மால் மாறலாம்" என்று தெரிவித்தார்கள்.

"இந்த இடத்தில் இருப்பவர்களில் சிலர் இங்கு நிரந்தரமாக தங்குவதில்லை காலத்துக்கு காலம் வருவார்கள் செல்வார்கள். இந்த இடத்தில் பல சமூகப் பிரச்சினைகளும் உள்ளன.எனவே இவர்களின் சிலரை புனர்வாழ்வளித்து சாதாராண மக்களாக வாழ இடம் அமைக்க வேண்டும். இவர்களின் வாழ்வியல் முறையோடு இப்படியே இவர்கள் வாழவும் பழகியுள்ளனர். பிரதேச செயலாளர், பொலிஸார், ஊடகங்கள் தான் முக்கியமாக இவர்களுக்கான பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவர்கள் குறிப்பிட்ட குளம் கைவிடப்பட்டுள்ளது. இக்குளம் இன்னும் ஒரு பிரதேசத்துக்கு சொந்தமானது. அந்த மக்களோடு உடன்பாட்டுக்கு வந்தே இந்த விடயத்தை முன்னெடுக்க வேண்டும்" என இந்தப் பிரதேசத்துக்கு பொறுப்பான கிராமசேவகர் தெரிவித்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 27 நவம்பர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.